Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்.
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

ஈழநாடு
EELA NADU
National TAMIL DAILY
தேசிய தினசரி

போன் 389 | தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழப்பாணம், பிலவ ஆனி 22 ஆம் நாள் முஹர்ரம் 22 (6-7 61) வியாழக்கிழமை | இதழ் 122

# சொந்த அச்சுக்கூடம்

## மாநகரசபைஆரம்பிக்கும்?

### அடுத்த கூட்டத்தில் அரசாங்க அச்சக அதிபரின் கடிதம் பரிசீலனை

யாழப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மாநகரசபை தனது சொந்தத்தில் ஓர் அச்சியந்திரசாலையை நிறுவுவதுபற்றி இப்பொழுது ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. இந்தத் திட்டம் இப்பொழுது கமிட்டி நிலையில் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இந்த அச்சியந்திரசாலையை நிறுவுவதற்கு உபவரவு செலவுத் திட்டதில் பணம் ஒதுக்கப்பட வேண்டுமென மாநகரசபை அங்கத்தவர் பலரும் அபிப்பிராயப்படுவ தாகவும் இதனை மாநகரசபை அங்கீகரிக்குமாயின் மிக விரைவில் இத்திட்டம் பூர்த்தியாகலாமெனவும் தெரியவருகிறது.

மாநகரசபைக்குத் தேவையான அச்சு வேலைகள் யாவும் இப்பொழுது வெளியிலுள்ள அச்சியந்திரசாலைகளிலேயே செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் வருடா வருடம் இருபதினுயிரம் ரூபாய் மாநகரசபைக்குச் செலவாகிறதென்றும் இச்செலவைக் கட்டுப் படுத்தவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கான முயற்சிகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதாகவும் கூறப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

## "திரு. சேனநாயகாவை புத்தராக ஏற்கமாட்டோம்"

### சாஸனக் கமிஷன் அறிக்கை பற்றி தேரோ கண்டனம்

கொழும்பு, புதன்

"மைத்திரி பால சேனநாயகாவை புத்தராக நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது" என ஐக்கிய பிக்கு பெரமுனையைச் சேர்ந்த முக்கிய பிக்குகளில் ஒருவரான தல்பாவில சீலவன்சதேரோ கூறினர்.

சாஸனக் கமிஷன் அறிக்கையை அமுல்நடத்த வேணடும் என்ற கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகாவின் யோசனைகுறித்தே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"பிக்குகளைத் தண்டிக்க திரு. சேனநாயகா சட்டம் வகுக்க முயற்சிக்கிருர். இது சாசனத்தின் புனிதத் தன்மையை உயர்த்த எவ்வகையிலும் உதவிசெய்யாது. எனக்கு வயது 60 க்குமேல் ஆகிவிட்ட போதிலும், அரசியலிலிருந்து நான் ஓய்வு பெற நினைத்த போதிலும் பண்டார நாயகாவின் கொலைக்குப்பின் சங்கத்தைப் பாதுகாக்க நான் உறுதி பூண்டுள்ளேன். நான் ஓய்வு பெற்று கலாசாரசேவையில் ஈடுபட நினைத்திருந்தேன், ஆனல் திரு. சேனநாயகாவின் அநீதியான அழிவுக் கொள்கை என் மனதை மாற்றிவிட்டது" என்றும் அவர் கூறினர்.

இ. போ. ச

## மூவர் கமிஷன்

### அடுத்தவாரம் இயங்கும்

கொழும்பு, புதன்

இலங்கைப் போக்கு வரத்து சபை, அதன் ஆரம்பத்திலிருந்து நடத்தப்பட்ட வேலைகள் பற்றி விசாரணை நடத்த அதிகாரம் பெற்றிருக்கும் மூவரடங்கிய கமிஷன் அடுத்த வார ஆரம்பத்தில் அதன் வேலைகளை ஆரம்பிக்கும். 4 அல்லது 5 மாதங்களில் கமிஷன் தன் அறிக்கையைச் சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## எச். எஸ். ஸி. வகுப்புக்கு வயது தடை நீக்கம்

### கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கைவிபரம்

கொழும்பு, புதன்

கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் எச். எஸ். ஸி. வகுப்புக்குச் செல்வதற்கான வயது நிபந்தனைகள் தளர்த்தப்பட்டிருக்கிறது.

ஜி. ஸி. ஈ. மாணவன் முதல் வருஷப் பரீட்சையில் தேவையான தகுதி பெற்றிருந்தால் வயதுக் குறைவைக் கவனிக்காமல் எச். எஸ். ஸி.க்கு உயர்த்தப்படுவார் என அறிக்கை கூறுகிறது.

19 வயதுக்கு மேலானவர்கள் 1961-ம் ஆண்டு ஜனவரி 1-ம் திகதி ஜி. ஸி. ஈ. பரீட்சையில் சித்தி பெற்றிருந்தால் அவர்கள் எச். எஸ். ஸி.க்கு அதே கல்லூரியில் உயர்த்தப் படுவார்கள் என அறிக்கை கூறுகிறது.

## சீனபுனித தந்தம்

கொழும்பு, புதன்

தற்போது கண்டியில் வைக்கப்பட்டிருக்கும் சீனப்புனித தந்தம் வருகிற சனிக்கிழமை நுவரேலியாவுக்கு எடுத்துச் செல்லப்படும். ஜூலை 11-ந் திகதி வரை அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டபின் அது பதுளைக்கு எடுத்துச் செல்லப் படும்.

## பல்கலைக்கழக வெளி மாணவர் வகுப்புகள்

### காலை 8 முதல் மாலை 4-30 மணிவரை நடைபெறும்

கொழும்பு, புதன்

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளி மாணவர்களுக்கான வகுப்பு, நாளை முதல் ஆரம்பமாகும். உள்மாணவர்களைப் போலவே அவர்களுக்கும் காலை 8 மணி முதல் மாலை 4-30 மணிவரை வகுப்புக்கள் நடத்தப்படும்.

உள், வெளி மாணவர்களுக்குப் பொதுவான ஒரு நேர அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கிறது. வெளிமாணவர்களுக்கு மாலை வகுப்புக்களை நடத்த வேண்டுமென முன்பு தீர்மானிக்கப்பட்ட முடிவு கைவிடப்பட்டது.

ஆயினும், வெளிமாணவர்களுக்கு சில விரிவுரைகள் மட்டும், மாலை 4-30 முதல் 5-20 வரை நடத்தப்படும்.

வெளிமாணவர்களின் பிரச்சினைகளைக் கவனிக்கும் பொருட்டு டாக்டர் பி. ஈ. பெர்ணண்டோ, பேராசிரியர் ஹெட்டியாராச்சி, திரு. வி. செல்வநாயகம், டாக்டர் ஸ்ரீமதி சிரிமா கிரிபமுவா ஆகியோரடங்கிய ஒருக்ஷேமநலக் கமிட்டி நிறுவப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வெளிமாணவருக்கும் ஒரு அடையாளக் கார்ட் வழங்கப்படும். சர்வகலாசாலைக்குள் பிரவேசிக்கும்போது அவர் அதை எடுத்துச் செல்ல வேண்டும். அவசியம் ஏற்படும் போது அதை அடையாளம் காட்ட வேண்டும்.

## முதலாளிகளுக்கு விதி விலக்கு

கொழும்பு, புதன்

தோட்ட முதலாளிகள் காணிகளுக்கு விதிக்கப்படும் இரட்டை வரியிலிருந்து விதி விலக்களிக்கப்படுவவர் எனத் தெரிகிறது.

## கிழக்கு நைஜீரிய பிரதமர்

புதுடில்லி, ஜூலை 5

கிழக்கு நைஜீரிய பிரதமர் டாக்டர் ஒக்பாரா டில்லியிலிருந்து இன்று காஷ்மீர் சென்ருர். இந்தியாவின் அபிவிருத்தித்திட்டங்களை அறிந்துவருவதற்காக நைஜீரிய மந்திரி ஒருவரையும், அதிகாரி ஒருவரையும் இந்தியாவுக்கு அனுப்பப் போவதாய் அவர் தெரிவித்தார்.

## அமெரிக்காவில் இலங்கை பாராளுமன்ற தூதுகோஷ்டி

### ஹாவாய்த் தீவுக்கு புறப்பட்டது

கொழும்பு, புதன்

கடந்த 5 வாரங்களாக அமெரிக்காவில் சுற்றுப்பிராணம் செய்துவரும் இலங்கைப் பார்லிமெண்ட் தூதுகோஷ்டியின் 4 அங்கத்தினர்கள் ஹொனாலுலுவுக்கு விமான மூலம் பிரயாணமாயினர். அமெரிக்காவின் 50 வது புதிய ராஜ்யமான அழகுமிக்க ஹாவாய்தீவில் சுற்றுப்பிரயாணம் செய்யுமுகமாக தலைநகர் ஹொனலுலுவுக்கு அவர்கள் சென்றிருக்கின்றனர். இயற்கையன்னையின் கடாட்சம் பெற்ற ஹாவாய் வண்ண மலர்களுக்கும், அழகு வனிதையர்கட்கும், நடனங்களுக்கும் பெயர் பெற்ற ராஜ்யமாகும்.

தூது கோஷ்டியின் 5 வது அங்கத்தினர், நியூயார்க். லண்டன் வழியாக கொழும்புக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாயும் ஒரு செய்தி கூறுகிறது.

## வெளி விவகாரப்பகுதி 5 பிரிவுகளாக்கப்படும்

### ஆகஸ்ட் மாதம் முதல் புதிய ஏற்பாடுகள் அமுலாகும்

கொழும்பு, புதன்

வெளிநாட்டு அமைச்சின் கீழுள்ள வெளிநாட்டு உறவுப் பகுதி அடுத்த மாதம் முதல்திகதி தொடக்கம் திருத்தியமைக்கப்படவிருக்கிறது. வெளிநாட்டு உறவுப் பிரிவு 5 பகுதிகளாக்கப் படும்.

இவற்றில் 4 உப பிரிவுகள் உலகின் பிரதான அரசியல், பூமிசாஸ்திரப் பகுதியைக் கொண்டிருக்கும். 5 வது பிரிவு தகவல் முதலியவற்றைக் கொண்டிருக்கும்.

ஒவ்வொரு உப பிரிவுக்கும் ஒரு சிரேஷ்ட அதிகாரி பொறுப்பாயிருப்பார். அவருக்கு ஒரு உதவியாளரும் இருப்பார். அனைத்துக்கும் பொறுப்பாக வெளிநாட்டு உறவுக் கவுன்சிலர் இருப்பார்.

வெளிநாட்டு உதவி நிதியமைச்சின் கீழ் ஒப்படைக்கப் படும் வெளிநாட்டிலாகா திறமையாக நடைபெறு முகமாக இவ்வித ஏற்பாடு செய்யப் படவிருக்கிறது.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி: யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

A50 கேம்பிறிஜ் (Cambridge) EN 7000 தொடர்பிலக்கமுள்ள கறுப்பு நிறமான கார் நல்ல நிலைமையிலிருக்கிறது. விலை ரூ. 7000-00த்திற்குமேல். காரை காலையிலும் மாலையிலும் பார்வையிடலாம். 15A, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.

## காணவில்லை

26-6-61 திங்கட்கிழமை பி.ப. 3 மணியிலிருந்து பண்டா அல்லது விஜயசூரியா என்ற கருமை நிறமுடைய, வலது கைப்பெருவிரல் இரண்டுஉள்ள பையனைக் காணவில்லை. போகும்போது கறுப்புக் காற்சட்டையும், கோடு போட்ட சட்டையும் அணிந்திருந்தான். பிடித்துக் கொடுப்பவர்களுக்கு இனம் கொடுக்கப்படும். அறிவிக்குமிடம்: M. T. பொன்னம்பலம், 108, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். போன் 380.

## NOTICE

In the District Court of JAFFNA.

No. P. 485

Arjuna Augustine Virasingha of Jaffna, presently of Colombo.

*Plaintiff.*

Vs.

1. Rajaratnam Kanagasooriam and wife
2. Mercy Florence Sampooranam Kanagasooriam, both of Chundicully, Jaffna.

*Defendants.*

It is hereby notified that action No. P. 485 has been instituted in the District Court of Jaffna under the Partition Act No. 16 of 1951 for the partition/sale of the land called Vilanai Ponninra Vilanai Mailapulam Nunkiyavudai Velalavathai and Nunkiyavudai in extent 239 Lms. V.C. and 10, 5/8 kls. situated at Chankanai in Valikamam West Division Jaffna District.

The defendants in this action were summoned to appear in Court on the 23rd day of March 1961 and they have, not filed answer.

This case will be called on the 7th day of August 1961 at 10 O'Clock in the forenoon for proof of this publication and for fixing of ex-parte hearing.

Jaffna, this 3rd day of July 1961.

By order of Court,

(G. A. V. Pillainayagam)
*Secretary.*

## நோயாளர் வீடு திரும்பினர்
### டாக்டர்கள் போதியஅளவு இல்லை

கொழும்பு, புதன்

கொழும்பு பெரியாஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் காது, மூக்கு, தொண்டை சம்பந்தமான வியாதிகளைப் பார்வையிடப் போதியடாக்டர்கள் இல்லாத காரணத்தினால், பல நோயாளர் கடந்த நான்குநாட்களாக வீடு திரும்பவேண்டியிருந்தது.

இங்கு தினமும்காலை 8 மணி தொடக்கம் 11 மணிவரைசுமார் 200 நோயாளருக்கு துண்டு கொடுப்பது வழக்கம். கடந்த நாலு தினங்களாக துண்டுகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது. திங்கட்கிழமை 125 துண்டுகளும், செவ்வாய்க் கிழமை 75 துண்டுளும், காது, மூக்குத், தொண்டை நோயாளருக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந் நோய்களைப் பார்வையிடும் பகுதியில் டாக்டர்கள் குறைவாக இருந்தால், மற்றப் பகுதிகளிலிருந்து டாக்டர்கள் உதவிக்கு வருவது வழக்கம். திங்கட்கிழமையும், செவ்வாய்க் கிழமையும் வெளிநோயாளரைப் பார்வையிடும் மற்றப் பகுதியிலும் டாக்டர்கள் வராத காரணத்தால் காது, பல், கண் நோயாளர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பவேண்டியிருந்தது.




# சம்பள அறிக்கை
## சமத்துவத்துக்கு ஒரு வழி

—மெத்தானந்தா

கொச்சிக்கடை, புதன்

"எனக்குத் தெரிந்த மட்டில் சம்பளக் கமிஷனின் அறிக்கையை முறியடிக்கக் கூடிய வகையில் அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நிதிக் கஷ்டத்தின் காரணத்தினாற்தான் அரசாங்கம் கமிஷனது திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரத் தாமதிக்கின்றதோ என்பதைப்பற்றிக் குறிப்பிட நான் விரும்பவில்லை."

இவ்வாறு லங்கா ஜாதிக குருசங்கத்தின் வென்னப்புவாக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் செனெட்டர் ஏ. டி. ஜயசேகரா கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: படகு ஒன்றிலே பிரயாணம் செய்து சோஷலிசத்தைப் பெற்றுவிட முடியாது. தேசியக் கல்வியால் ஏற்படும் நன்மைகளை ஒருமாதத்திலோ ஒரு வருடத்திலோ பெற்றுவிட முடியாது. பிள்ளைகளுக்கு இயற்கையாக உள்ள வல்லமைகளுக்கும் ஆர்வங்களுக்கும் மதிப்புக்கொடுக்காது, அவர்களுக்கு பல்கலைக் கழகக் கல்வியொன்றையே புகட்ட வேண்டும் எனப் பெற்றோர்கள் விரும்புகிறார்கள். பல்வேறு துறைகளிற் கல்வியைப் பிரிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. கைத்தொழில் கமத்தொழில் ஆகிய துறைகளிற் கல்வி பயிற்றப்படல் வேண்டும்.

ஜாதிக குருசங்கத் தலைவர் திரு. எல். மெத்தானந்தா தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது:

ஆசிரியர்களை நியமிப்பதிலும் இடமாற்றம் செய்வதிலும் பதவி உயர்த்துவதிலும் அரசியல் வாதிகள் தலையிடுவது நீதியற்ற செயலாகும். சில பார்லிமெண்ட் மேலதிகாரிகளும் அமைச்சர்களும் 'நிதி நெருக்கடி' என்ற பெயரால் தேசிய சம்பள அறிக்கையை முறியடிக்கப் பார்க்கிறார்கள். இவ்வாறு முறியடிக்கும் எத்தனங்கள் யாவற்றையும் ஆசிரியர்கள் எதிர்த்துப் போராட வேண்டும். சிவில் சேவையை ஒழித்துவிடுவதை முதலாளி வகுப்பினர் வெறுக்கின்றனர். இச் சேவை ஒழிந்துபோனால் தமது பெண்பிள்ளைகளைச் சிவில் சேவையாளர்களுக்கு மணம் செய்து கொடுக்க முடியாதென்பது இவர்கள் கவலை போலும்! சம்பள அறிக்கையை உடனடியாகவே அமுலுக்குக் கொண்டுவரும்படி அரசாங்கத்திடம் கோருங்கள். சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கு இது மறைமுகமாக உதவி புரிவதாகும். சம்பள அறிக்கை அமுலுக்கு வருமாயின் சமத்துவத்திற்கு அதுவே வழிவகுப்பதாகும்.

## எஸ். எஸ். ஸி. வாலிபர் மனுக்கள் பரிசீலனை

கொழும்பு, புதன்

கல்வி இலாகாவின் புதிய திட்டத்தின்படி எஸ். எஸ். ஸி படித்த 3,250 பேருக்கு ஜூன் மாதத்திற்கிடையில் ஆசிரியர் வேலை கிடைக்கவிருந்தது. ஒவ்வொரு மனுவையும் தனியாகப் பரிசீலனை செய்யவேண்டியிருப்பதால், ஜூன் மாதத்திற்கிடையில் இவர்களுக்கு வேலைகொடுக்கமுடியவில்லை என்றுமாகாணங்களைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள் சுட்டிக்காட்டியிருப்பதாக, கல்வி இலாகாவைச்சேர்ந்த அதிகாரி கூறினார்.

## கசிப்பு உற்பத்திக்கு பிக்குகளின் உதவி
### மந்திரி கூற்று

மாத்தளை, புதன்

"சட்ட விரோதமாகத் தயாரிக்கப்படும் 'கசிப்பு' உற்பத்தியிலும், அதை விற்பனவு செய்வதிலும் ஈடுபட்டவர்களுக்கு, சில பிக்குகள் உதவி செய்வதாகச் சாசனக் கமிஷனுக்கு முன்னர் சாட்சியம் கூறப்பட்டுள்ளது" என்று பண்டாரநாயக்கா அரசாங்கப் பாடசாலையில் அமைக்கப்பட்ட வழிபாட்டறையொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் கைத்தொழில், வீடமைப்பு, கலாச்சார மந்திரி திரு. மைத்திரி பாலசேனநாயக்கா கூறினார்.

# 'சம்பள அறிக்கையை அரசாங்கம் அமுல் செய்யுமா?'

—வில்மட் பெரேரா

கொழும்பு, புதன்

"மூன்று வருடத் தீவிர உழைப்பின் பின் இப்போது தான் சம்பள அறிக்கையை அரசாங்கத்திடம் நான் சமர்ப்பித்திருக்கிறேன். அவ்வறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ள சிபார்சுகளைக் கையாள அரசாங்க நிதி நிலைமை இடம் கொடுக்குமா என்பதை மக்களுக்குக் கூறுமாறு நான் அரசாங்கத்தைக் கேட்கின்றேன்" என்று திரு. வில்மட் பெரேரா ராஜூ குமாரசுவாமி தம்பதிகளுக்கு அளிக்கப்பெற்ற பிரியாவிடை விருந்துபசாரத்தின் போது குறிப்பிட்டார். அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெறுவது சம்பந்தமாகப் பேசும்போது, 60 வயதைக் கட்டாய ஓய்வு பெறும் வயதாக்கவும் விசேஷ காரணங்களுடன், 62 வயதுவரை பணியாற்றலாம் எனவும் குறிப்பிட்டிருப்பதாக அவர் கூறினார்.

ஒருங்கிணைந்த அரசாங்க சேவையைச் சிவில் சேவை பெரிதும் வரவேற்கிறது. இதற்காக சிவில் சேவை கைவிடப்படவேண்டியிருப்பதால், இந்த அம்சமும் சம்பளக் கமிஷனில் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறதென்று மேலும் அவர் குறிப்பிட்டார்.

திரு. சி. ஈ. பி. ஜெயசூரியா பேசுகையில் சிவில் சேவைக்குப் பெருந்தொகையான வரிப்பணம் செலவானாலும், அதை அறவே ஒழித்துக் கட்டாமல் மாற்றியமைப்பதே உசிதமெனத் தெரிவித்தார்.

கனகபுரம்

## குடியேற்றத்திட்டம் அடிக்கல் நாட்டுவிழா

கனகபுரம், வியாழன்

கனகபுரம்கூட்டு வாழ்க்கைப் பண்ணைக் குடியேற்றத் திட்டத்தில் வீடுகள் கட்டுவதற்கான அடித்தளக் கல் நாட்டுவிழா திங்கட்கிழமை நடைபெற்றது. உள்நாட்டு அமைச்சின் பிரதம உதவிக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீ காந்தா அடிக்கல்லை நாட்டினார்.

திரு. ஸ்ரீ காந்தா பேசுகையில் படித்து விட்டு வேலையின்றியிருக்கும் ஆயிரக்கணக்கான வலிபர்கள் இப்படியான முயற்சிகளில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கதெனவும் இதில் இளைஞர்கள் அதிகம் ஊக்கங்காட்ட முன்வரவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில் யாழ்ப்பாண மாவட்ட தற்காலிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ரி. மூர்த்தி, அப்பகுதிக் காரியாதிகாரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## இரத்தக் குழாய்களை ஒட்ட வைக்க பிளாஸ்டிக் பசை

ஹூட்டன், (டெக்ஸாஸ்) ஜூலை 5

தையல்கள் போடாமலேயே இரத்தக் குழாய்களை பரிசோதிக்கும் முறையொன்று டெக்ஸாஸ் பல்கலைக் கழகத்தின் எம். டி. ஆண்டர்ஸன் மருத்துவமனை கட்டி நோய் கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

திரவ பிளாஸ்டிக்மூலம் வெட்டுப்பட்ட இரத்தக் குழாய்களைச் சேர்த்து, ஒட்டவைத்துவிடுகின்றனர் மருத்துவர்கள். நாய்களின்மீது இந்த ஆராய்ச்சியைச் செய்தபோது கெடுதியான விளைவு ஏதும் ஏற்படவில்லை. இரத்தக் குழாய்கள் இரண்டு வாரங்களில் சேர்ந்து கொண்டுவிடுகின்றன. பிளாஸ்டிக் பசையும் படிப்படியாக மறைந்துவிடுகிறது.

## மலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

சமூகத் தொண்டன் மலர் வெளியீட்டுவிழா வருகிற ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஓ. ஜோசப் தலைமை வகிப்பார்.

யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாசத்தினால் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசில்களும் இங்கு வழங்கப்படவிருக்கின்றன.

இம்மலர் வெளியீட்டு வைபவத்தில் இரண்டாவது நிகழ்ச்சியாக விருக்கும் இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு இலங்கைப் பல்கழக்கழக விரிவுரையாளர் திரு. க. கைலாசபதி தலைமை தாங்குவாரென அறியப்படுகிறது.

"இலக்கியம் வாழ்க்கைக்கா? பொழுது போக்குக்கா?" என்னும் விஷயம் பற்றி விவாத அரங்கம் ஒன்றும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வடபகுதி

## பஸ் சேவை விரைவில் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதி பஸ் சேவை மிக விரைவில் அபிவிருத்தி செய்யப்படவிருப்பதாகத் தெரிகிறது. இம்மாத முடிவில் இப்பகுதியில் கூடுதலான பஸ்கள் ஓடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படுமாம்.

இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவரான திரு.சில்வா அண்மையில் வடபகுதிக்கு விஜயஞ் செய்து இங்குள்ள பல்வேறு பஸ் டிப்போக்களுக்கும் சென்று நிலைமையை நேரிற் பார்வையிட்டபோது இங்குள்ள நிலைமைபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புகார் செய்திருந்தனர்.

திரு. சில்வா வடபகுதிக்கு வந்து நிலைமைகளை நேரிற் பார்த்துச் சென்றதன் விளைவாகவே இந்த அபிவிருத்தி வேலை மேற்கொள்ளப்படுகின்றது.



# ஷோம்பே - இலியோ ஒப்பந்தம்: கடாங்கா நிராகரிப்பு

எலிஸபெத்வில்லி, ஜூலை 5

காங்கோ மத்திய அரசாங்கத்துடன் கடாங்கா அதிபர் திரு. ஷோம்பே சென்றமாதம் செய்துகொண்ட ஒப்பந்தத்தை கடாங்கா சட்டசபை நேற்று நிராகரித்துவிட்டது.

திரு. ஷோம்பே சுதந்திர மனிதனாக அந்த ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளவில்லையென்றும் தாம் விடுதலையடைவதற்காக அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டாரென்றும் கடாங்கா சட்டசபை தெரிவித்தது.

காங்கோவின் எதிர்காலம் பற்றிஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவதற்காக கொக்குயில் ஹத்வில்லியில் காங்கோ தலைவர்களின் மகாநாடொன்று சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் கூட்டப்பட்டது. இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளச்சென்ற கடாங்கா அதிபர் ஷோம்பே காங்கோ மத்திய அரசாங்க ஜனாதிபதி கஸாவுபுவுடன் ஏற்பட்ட கருத்துவேற்றுமை காரணமாக மகாநாட்டைவிட்டு வெளியேறினர் அவர் விமானத்தில் ஏறிக் கடாங்காவுக்குப் புறப்படும் சமயத்தில் காங்கோலிய துருப்புக்களால் கைது செய்யப்பட்டார்.

சென்ற மாதம் காங்கோ மத்திய அரசாங்கத்துடன் ஷோம்பே ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டபின் அவர் விடுதலை செய்யப்பட்டு கடாங்காவின் தலைநகரான எலிஸபெத் வில்லிக்குத் திரும்பினர்.

அந்த ஒப்பந்தப்படி காங்கோவுக்கும் கடாங்காவுக்குமிடையில் உள்ள எல்லைச்சுங்கத் தடைகள் நீக்கப்படவேண்டும். காங்கோவின் நாணயமே கடாங்காவிலும் புழக்கத்திலிருக்க வேண்டும். காங்கோ இராணுவத்துடன் கடாங்கா இராணுவம் ஒன்ருக இணைந்து ஒரே தலைமையின்கீழ் இயங்க வேண்டும். வெளிநாடுகளில் கடாங்காவுக்கும் காங்கோவுக்கும் ஒரேதூதுவர்களே இருக்க வேண்டும். காங்கோ பார்லிமெண்ட் ஐ. நா. உத்தரவாதத்துடன் மீண்டும் கூடவேண்டுமென்பதும் அந்த ஒப்பந்தத்தில் ஒரு அம்சம்.

லியப்போல்ட் வில்லியிலிருந்து விடுதலையடைந்து எலிஸபெத் வில்லிக்குத் திரும்பிய திரு. ஷோம்பே, கடாங்கா சுதந்திரத்தனி நாடாகவே தொடர்ந்திருந்துவருமென அறிவித்திருந்தார். லியப்போல்ட் வில்லி அரசாங்கப் பிரதமர் ஜோசப் இலியோவின் பதவி நிச்சயமற்றதென்றும் அவருடன் தான் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட போதிலும் அந்த ஒப்பந்தம் எந்த அளவுக்குச் செல்லுபடியாகுமென்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டிய விஷயமென்றும் தெரிவித்திருந்தார்.

காங்கோ மத்திய அரசாங்கத்துடன் திரு. ஷோம்பே செய்துகொண்ட ஒப்பந்தம் செல்லுபடியாகாதென்று கூறி அந்த ஒப்பந்தத்தை கடாங்கா சட்டசபை நேற்று நிராகரித்தது.

---

## ஐ. நா. உபகமிட்டி

### தென்னுபிரிக்க மந்திரி மிரட்டல்

கேப்டவுன், ஜூலை 5

தென்மேற்கு ஆபிரிக்கா சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஐ. நா. உபகமிட்டி ஆபிரிக்க எல்லைக்குள் நுழைந்தால் கமிட்டி அங்கத்தினர்கள் கைது செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று தென்னுபிரிக்க வெளிவிவகார மந்திரி திரு. எரிக்லோ நேற்று அறிவித்தார்.

இந்த உபகமிட்டியின் விசாரணை சம்பந்தமாக பிரிட்டன் தென்னுபிரிக்கா விஷயத்தில் சிநேகபான்மையற்ற முறையில் நடந்துகொளவதாகவும் திரு. எரிக்லோ குற்றம் சாட்டினர்.

தென்னுபிரிக்க அரசாங்கத்தின் இன ஒதுக்கல் கொள்கை காரணமாக தென் மேற்கு ஆபிரிக்க மக்கள் பெரும் இன்னல்களுக்குள்ளாவதாக புகார் கூறப்பட்டது சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு ஐ. நா. பொதுச் சபை ஒன்பது அங்கத்தவர்களைக் கொண்ட உபகமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. இந்தக் கமிட்டியைத் தென்மேற்கு ஆபிரிக்காவுக்குள் வருவதற்குத் தென்னுபிரிக்க அரசாங்கம் அனுமதியளிக்க மறுத்துவிட்டது.

---

## 5 லட்சம்தொன் சீனி அமெரிக்கா வாங்கும்

லண்டன், ஜூலை 5

லத்தின் அமெரிக்க நாடுகள், ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் அறு வார காலம் சுற்றுப்பிரயாணம் செய்த இந்திய உணவு வர்த்தக மந்திரி திரு. எஸ். கே. பாட்டில் புதுடில்லிக்குத் திரும்பு முன் பாரிஸ், ஜெனிவா ஆகிய இடங்களுக்கும் செல்வார்.

வருஷத்துக்கு ஐந்து லட்சம் தொன் சீனியை அமெரிக்கா வாங்கும் என்று திரு. பட்டீல் தெரிவித்தார்.

---

## வடக்கு வியட்நாம் குற்றச்சாட்டு

சைகோன், ஜூலை 5

தென் வியட்நாமில் கொரில்லாப் போர் சம்பந்தமாக சர்வதேசக் கட்டுப்பாட்டுக்கமிஷன் விசாரணை நடத்த வேண்டுமென்ற யோசனையை வடக்கு வியட்நாம் அரசாங்கத்தினர் எதிர்த்துள்ளனர். தென் வியட்நாமும் மேற்கு நாடுகளும் சேர்ந்து வியட்நாமில் நெருக்கடி ஏற்படுத்த முயற்சி செய்வதாக வடக்கு வியட்நாம் குற்றம் சாட்டியது.

---

## 16 பேரைக் கொன்ற சிங்கம்

### இன்னும் பிடிபடவில்லை

லுசாக்கா, ஜூலை 5

வட ரொடிஷியாவின் மத்திய மாகாணத்தில் தனியான ஒரு புதர் பாதையில் உலாவும் ஒரு சிங்கம் கடந்த சில மாதங்களில் 16 பேரைக் கொன்றுவிட்டது.

ஒரு திறமையான ஐரோப்பிய வேட்டை அதிகாரியின் தலைமையில் ஏராளமானோர் அச்சிங்கத்தை வேட்டையாடும் முயற்சியில் ஈடுபட்டும் இதுவரை அச்சிங்கம் அகப்படவில்லை.

---

## அல்ஜீரியாவில் பிரிவினை தினம்

### பாதுகாப்பு படைகள் ஜரூர்

அல்ஜியர்ஸ், ஜூலை 5

அல்ஜீரியாவை சகாராவிலிருந்து பிரித்துவிட வேண்டுமென்ற பிரான்சின் திட்டத்தை எதிர்த்து இன்று அல்ஜீரியாவில் பிரிவினை எதிர்ப்புத்தினம் அனுஷ்டிக்கும்படி அல்ஜீரிய தேசியத் தலைவர்கள் கேட்டுள்ளனர்.

பிரிவினைத் தினத்தை தேசியவாதிகள் அனுஷ்டிப்பதால் கலகம் ஏற்படாமல் அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் பாதுகாப்பு படைகள் ஈடுபட்டுள்ளன. பாரிஸிலிருந்து மேற்கொண்டு துருப்புக்கள் விமானத்தில் இன்று அல்ஜியர்ஸ் வந்து சேர்ந்தன.

---

## விசித்திரமான தீர்ப்பு

சிட்னி, ஜூலை 5

வழக்கொன்றில் தீர்ப்பு கூறுவதற்கு ஒரு நாணயத்தைச் சுண்டி 'பூவா, தலையா' எனப் பார்த்து, அதன்படி ஜூரிகள் தீர்ப்பளித்தனர்,

ஜூரிகள் தமக்குள் கலந்து பேசுவதற்காக தனியறைக்குள் சென்ற சிறிது நேரத்திற்குப் பின்னர் அங்கிருந்து சிரிப்பொலி கேட்டது. இதைப்பற்றி விசாரித்தபோது, "இவ்வழக்கில் சரியான முடிவுக்கு எங்களால் வர முடியாததால் ஒரு நாணயத்தைச் சுண்டி 'பூவா, தலையா' என்று பார்த்தோம் என ஜூரிகள் தெரிவித்தனர்.

இதன்படி வேலையில்லாத ஒருவருக்கு 12 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஒரு வீட்டிலிருந்து மேஜை, நாற்காலிகளைத் திருடியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

---

## ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

முள்ளியவளை, புதன்

கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து, வெள்ளாமுள்ளி வாய்க்கால் அரசினர் பாடசாலைக்கு மாறிச் சென்ற ஆசிரியர் திரு. க. முத்தையாவுக்கு பெற்ரூர் ஆசிரியர் சங்கத்தாலும் மாணவர் மன்றத்தினராலும் பிரியாவிடை ஒன்று அளிக்கப்பட்டது. மாறிச்செல்லும் ஆசிரியரின் சேவையைப் பாராட்டி பலர் பேசினர். ஆசிரியருக்குப் பிரிவுபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. விருந்துபசாரமும் நடைபெற்றது.

---

## கி. பாகிஸ்தான் உயர்நீதி மன்றம்

டாக்கா, ஜூலை 5

கிழக்குப் பாகிஸ்தான் அட்வகேட் ஜெனரல் ஜனப். சௌத்ரி கிழக்குப் பாகிஸ்தான் உயர்நீதி மன்றத்தில் மேலதிக நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

# குவாய்த்-அரபுலீக்கில் ஈராக் ரத்து அதிகாரம்

## பாதுகாப்புச் சபை மீண்டும் கூடுகிறது

நியூயோர்க், ஜூலை 5

குவாய்த் நிலைமை பற்றி விவாதிப்பதற்காக ஐ. நா. பாதுகாப்புச் சபை இன்று மீண்டும் கூடுகிறது

குவாய்த்தின் சுதந்திரத்துக்கு ஈராக்கினுல் பயமுறுத்தல் ஏற்பட்டுள்ளதென்று குவாய்த் ஐ. நா. வுக்கு புகார் செய்ததைத் தொடர்ந்து ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. பாதுகாப்புச் சபைக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் ஈராக்கும் ஒரு எதிர்ப் புகார் செய்திருந்தது. குவாய்த்தில் பிரிட்டிஷ் துருப்புக்கள் வந்து குவிந்துள்ளதால் ஈராக்கின் சுதந்திரத்துக்கும் பந்தோபஸ்துக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஈராக் புகார் செய்தது.

குவாய்த்தின் புகாரையும் ஈராக்கின் எதிர்ப் புகாரையும் பற்றி விவாதிப்பதற்காக பாதுகாப்புச் சபை இன்று மீண்டும் கூடுகிறது.

ஞாயிற்றுக்கிழமைக் கூட்டத்தில் ஈராக் பிரதிநிதியும் பிரிட்டன், ஐக்கிய அரபுக் குடியரசு ஆகியவைகளின் பிரதிநிதிகளும் பேசினர். இன்றைய கூட்டத்தில் குவாய்த் பிரதிநிதி பேச அனுமதிக்கப்படுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

### படைகள் போய்ச் சேர்ந்தன

குவாய்த் மன்னர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க குவாய்த் ராஜ்யத்தைப் பாதுகாப்பதற்கு பிரிட்டிஷ் துருப்புக்கள் குவாய்த் போய்ச்சேர்ந்துவிட்டன. குவாய்த் ஈராக் எல்லையில் பிரிட்டிஷ் துருப்புக்கள் காவல்புரிகின்றன. ஏடன், சைப்ரஸ், ஆபிரிக்கா முதலிய இடங்களிலிருந்த பிரிட்டிஷ் படைகள் குவாய்த்துக்குச் செல்லும்படி உத்தரவிடப்பட்டது. பிரிட்டிஷ் போர்க்கப்பல்களும் குவாய்த் சென்றுள்ளன.

### மாஸ்கோ புகார்; வாஷிங்டன் மறுப்பு

குவாய்த் பிராந்தியத்துக்கு ஐந்து போர்க் கப்பல்களை அமெரிக்கா அனுப்பிவைத்துள்ளதாக மாஸ்கோ ரேடியோ நேற்று குற்றம்சாட்டியது. இக்குற்றச்சாட்டை வாஷிங்டனில் அமெரிக்க ராஜாங்கக் காரியாலய அதிகாரியொருவர் மறுத்தார்.

### அரபு லீக் கூட்டம் ஒத்திவைப்பு

அரபு லீக் சபையில் அங்கத்துவம் கோரி குவாய்த் அனுப்பிய மனுவை பரிசீலனைசெய்வதற்காக அரபு லீக் சபையின் கூட்டம் நேற்று கெய்ரோவில் நடைபெற்றது. சபை மீண்டும் இம்மாதம் 12ம் திகதி கூடும்.

குவாய்த் அங்கத்துவம்பற்றி ஆராய்வதற்காக அரபு லீக் சபையின் கூட்டம் நடைபெறும்போது ஈராக் அதில் கலந்து கொள்ளாது என்று முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் ஈராக் பிரதிநிதி கலந்து கொண்டார். குவர்ய்த் அரபு லீக்கிலும் அங்கத்துவ நாடாக்கப்பட்டாலும் ஈராக் லீக்கிலிருந்து வெளியேறப்போவதில்லை யென்று ஈராக் பிரதிநிதி தெரிவித்தாராம்.

### ஈராக்கின் ரத்து அதிகாரம்

அரபு லீக்கின் நேற்றைய கூட்டத்தில் குவாய்த் அங்கத்துவம் கோரி அனுப்பிய மனுவை ஈராக் தனது ரத்து அதிகாரத்தைப் பிரயோகித்து நிராகரித்துவிட்டதாக ஊர்ஜிதமற்ற செய்தி யொன்று கூறுகிறது.

குவாய்த் விவகாரம் சம்பந்தமாக பாக்தாத் சென்று ஈராக் பிரதமர் ஜெனரல் காசிமைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய அரபு லீக் பொதுக் காரியதரிசி இப்பொழுது குவாய்த் சென்றுள்ளார். குவாய்த் மன்னரைச் சந்தித்துப் பேசியபின் சவூதி அரேபிய மன்னர் சவூதியைச் சந்தித்துப் பேசுவதற்காக ரியாத் போய்ச்சேர்வார்.

---

## சப்தகன்னியர் பொங்கல்

முள்ளியவளை, புதன்

வட்டுவாகலில் உள்ள புராதனமான சப்த கன்னியர் கோவில் வருடாந்தப் பொங்கல் விழாவும், கற்சிலைமடு நாகம்மை பொங்கல் விழாவும் திங்களன்று சிறப்புற நடைபெற்றன. வவனியாப் பகுதியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் விழாவிற் கலந்து கொண்டனர்.

---

## விவேகானந்த சபை சித்தாந்த பிரவேச பண்டித பரீட்சை

மன்னுர், புதன்

கொழும்பு விவேகானந்த சபையால் முதல்முறையாக நடாத்தப்பட்ட சைவ சிந்தாந்த பிரவேச பண்டித பரீட்சை முடிவு வெளியாகியுள்ளது. 1960 மார்கழியில் நடாத்தப்பட்ட இப்பரீட்சையில் இருவர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர். அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. சித்தியடைந்தோர்:

ச. இராமலிங்கம், மூளாய்; சு. செல்லத்துரை, இளவாலை. இவர்கள் இருவரும் இரண்டாம் பிரிவிற் சித்தி எய்தியுள்ளனர்.

விவேகானந்த சபையாரின் சமயபாடப் பரீட்சைத் தொடரில் இதற்கடுத்ததாக இவ்வாண்டில் சைவ சித்தாந்த பண்டித பரீட்சையும், அடுத்த ஆண்டில் சைவ சிந்தாந்த பண்டித பரீட்சையும் நடக்கவிருக்கிறது. பின்னர் தொடர்ந்து எல்லாப் பரீட்சைகளும் நடைபெறும்.

பாடசாலை மாணவர்க்குரிய சமயபாடப் பரீட்சை (1960) முடிவுகள் யாவும் சென்ற வாரம் வெளியாயின.

---

## காஷ்மீர் தியாகிகள் தினம்

கராச்சி, ஜூலை 5

இம்மாதம் 13-ந் திகதி காஷ்மீர் தியாகிகள் தினம் அனுஷ்டிப்பதென்று பாகிஸ்தானில் உள்ள காஷ்மீர் விடுதலை இயக்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.

---

# "ரஷ்யாவுடன் சமாதானமாக வாழ யு. எஸ். விரும்புகிறது"

—கென்னடி

லண்டன், ஜூலை 5

ரஷ்யாவுடன் யு. எஸ். சமாதானமாக வாழ விரும்புவதாகவும், சமாதானத்திற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய பிரச்னைகளை அந்தரங்க சுத்தியுடன் அணுகினுல் தீர்த்துவிடலாம் என்றும் ஜனாதிபதி கென்னடிசோவியத் பிரதமர் குருஷேவுக்குத் தெரிவித்துஅளார்.

பிரச்னைகளுக்குத்தீர்வு அவசியம் என்று கருதி, விருப்பப்படி சமாதானம் நிச்சயமாக நிலைநிறுத்தப்பட்டுவிடும் என்று கென்னடி கூறியுள்ளார்.

யு. எஸ். சுதந்திரதினத்தை முன்விட்டு சோவியத் பிரதமர் குருஷேவும் ஜனாதிபதி பிரெஜ்னேவும் கெனடிக்கு செய்தியனுப்பியிருந்தனர். அந்தச் செய்தியிலேயே கென்னடி மேற்கூறியவாறு குறிபிட்டிருந்தார்.

---

## சாரணர் இயக்கம் 1962-ல் பொன்விழா

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கை சாரணர் இயக்கத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவுவிழா 1962-ம் ஆண்டில் கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில் நடைபெறுமெனத் தெரிகிறது. இவ்விழாவில் கலந்துகொள்ளுமாறு உலகப் பிரதிநிதிகளுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து 250 பிரதிநிதிகள் இவ்விழாவுக்குச் செல்லுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## மணிவாக்கு

உன் பேச்சுக்களில் சத்தியமும் தைரியமும் பொருந்தியிருக்கவேண்டும். அப்போதுதான் சுகமாய் இருப்பாய். உன் மகிழ்ச்சிக்கும் எவனாலும் குறைவு நேராது.

—ஓர் அறிஞர்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
ஆனி மீ 22உ (6-7-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## வெளியேறும் அதிகாரிகள்

அரசாங்கத்திலே பெரிய பதவி வகித்து வந்த திரு. ராஜு குமாரசாமி, அப்பதவியை ராஜினமாச் செய்துவிட்டு, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் உத்தியோகமேற்கச் செல்கின்ருர்.

ஸிவில் சர்வீஸ் பரீட்சையில் முதன்மையாகத் தேறி, பல பொறுப்பான பதவிகளை வகித்து வந்த திரு. குமாரசாமி, எதற்காகத் தமது பதவியை ராஜினமாச் செய்ய நேரிட்டதென்ற காரணத்தை இதுவரை விளக்கவில்லை. ஆனல் அவருக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை விருந்தொன்றில் அவர் பேசுகையில், இதுபற்றித் தாம் பின்னர் எழுதுவதாகவும், பழைய அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருந்த ஓர் அதிகாரியை புதிய அரசாங்கம் சந்தேகக் கண்ணுடன் பார்க்கும் மனப்பான்மை நாட்டில் இருக்கிறதென்றும், நாட்டுக்கு விசுவாசமாக இருக்க வேண்டிய அதிகாரிகள், எந்த அரசாங்கம் அதிகாரத்தில் இருப்பினும் அதற்கு விசுவாசமாக இருந்து சேவை செய்ய வேண்டுமென்றும் சரியாகக் குறிப்பிட்டார்.

அரசியல் கட்சிகள் அதிகாரத்துக்காகப் போட்டி போட்டுக்கொண்டு விரோதிகளைப் போல் போராடுகையில் அரசாங்க அதிகாரிகளின் நிலைமை மிகவும் சங்கடமானதாகும். ஜனநாயகத்திலே எந்தச் சமயமும் அரசாங்கம் மாறி, புதிய அரசியல் கட்சி அதிகாரத்துக்கு வரலாம். அதிகாரிகள் எந்த அரசாங்கத்துக்கும் விசுவாசமாக இருக்கலாமேயன்றி அந்த அரசியல் கட்சியிலோ அதன் வேலைகளிலோ சிறிதும் சம்பந்தப்படக்கூடாது. கட்சி அரசியலில் கலக்காமல் ஒதுங்கி இருப்பதே அரசாங்கச் சிப்பந்திகளுக்கும் பத்திரமாகும்.

இதே சமயத்தில் மந்திரிகள், அன்ருட நிர்வாக விஷயங்களிலும் அதிகாரிகள் பற்றியும் குறுக்கிடாமல், கொள்கைகளையும் வேலை முறைகளையும் வகுப்பதுடன் நிறுத்திக்கொண்டு, அவற்றை நிறைவேற்றிவைக்கும் பொறுப்பை நிரந்தர அதிகாரிகளுக்கு விட்டு விடவேண்டும். அதிகாரிகள் கவனித்து நடவடிக்கை எடுக்க தனிப்பட்ட பப்ளிக் சர்விஸ் கமிஷன் இருக்கின்றது. மந்திரிகள் அன்ருட நிர்வாகத்திலும், தனிப்பட்ட அதிகாரிகள் விஷயத்திலும் குறுக்கிடாமல் இருந்தாலே, அரசாங்க நிர்வாகமும் திறமையாகவும் சீராகவும் நடைபெறமுடியும்.

அனுபவமும் திறமையும் வாய்ந்த அதிகாரிகள் பலர் சமீபகாலத்தில் அரசாங்க சேவையை விட்டு விலகியதை அவ்விருந்துக்குத் தலைமை வகித்த திரு. வில்மட் பெரேரா குறிப்பிட்டு, இதனல் அரசாங்க நிர்வாகத்துக்கும் நாட்டுக்கும் நஷ்டமென்றும், இவ்விதமாகப் பலர் செல்லுவதன் காரணத்தை அரசாங்கம் கண்டறியவேண்டுமென்றும் கூறினர். அதிகவருமானம்கிடைக்கிறதென்று யாரும் தங்கள் சொந்த நாட்டை விட்டுப் பரதேசம் செல்லமாட்டார்கள். மனித மனம் அன்பையே நாடுவதாகும். அன்பான சூழ்நிலை இருப்பின், அதை விட்டுச் செல்ல யாரும் விரும்பமாட்டார்கள். ஆகவே அரசாங்கம் இம்முக்கிய விஷயத்தைப் பற்றி ஆராய்ந்து, இங்கிருந்து திறமையான அதிகாரிகள் இனியாவது வெளியேருமல், நாட்டுக்கே அவர்களது சேவை கிடைக்கும் வண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். அனுபவமும் திறமையும் மிக்க அதிகாரிகளின் சேவை நாட்டின் முன்னேற்றத்துக்கு மிக அவசியமாகும்.

## நெசவு நிலையத்தின் புதிய சாதனை

யாழ்ப்பாணம் நுண்கலை நெசவு நிலையம் பாவோடும் இயந்திரமொன்றைக் கண்டுபிடித்துப் புதியசாதனை ஒன்றை ஏற்படுத்தியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. மிகஇலகுவான முறையில் அமைக்கப்பெற்றுள்ள இந்த இயந்திரம், நூலைச் சிக்கவிழ்த்து, பண்படுத்தித் தறியில் போட்டு ஆடை நெய்யக் கூடிய அளவுக்குப் பயன்படுகின்றது. அத்துடன் மிகச் சிறந்த முறையில் குறைந்த காலத்தில் இந்த வேலைகளை எல்லாம் புதிய இயந்திரம் செய்து முடிக்குமெனவும் அறிகின்ருேம். உள்நாட்டு அமைச்சின் பிரதம உதவிக் காரியதரிசியான திரு. எம். ஸ்ரீகாந்தா இதனை இயக்கிவைத்துப் பேசும்போது, இப்படியான முயற்சி நாட்டின் செல்வப் பெருக்கத்துக்கும் தொழில் வளர்ச்சிக்கும் அத்தியாவசியமென்பதைச் சுட்டிக்காட்டியிருக்கின்ருர். அத்துடன் இளைஞர்களும் பொது மக்களும் இதிற் சேர்ந்து உழைத்து, இந்த இயக்கத்தைப் பொது நல இயக்கமாக உருவாக்க வேண்டுமெனவும் அவர் பெரிதும் விரும்புகின்ருர்.

தொழில் விருத்தியிலேதான் நாட்டின் சுபிட்ச வாழ்வு தங்கியிருக்கின்றதென்பதை அரசாங்கம் உணர்ந்து சில திட்டங்களை இன்று வகுத்து வருகின்றது. இலங்கையிலேயே ஒரு புதிய சாதனையெனக் கருதப்படும் நுண்கலை நெசவு நிலையத்தின் இந்த நன்முயற்சிக்கு அரசாங்கம் பூரண ஆதரவு அளிப்பதோடு இதனை நாடெங்கும் பரவச்செய்வதற்குத் துணைபுரியுமெனவும் நம்புகின்ருேம்.

# கொழும்புத் திட்டத்தின் பத்தாண்டுச் சாதனை

## வாழ்க்கை நிலையை உயர்த்த உதவும் மாபெரும் முயற்சி

பத்தாண்டுகளுக்கு முன்பு, தெற்கு, தென்கிழக்கு ஆசியா நாடுகளில் வறுமை தலைதூக்கி நின்றது. இரண்டாம் உலகப் போரினுல் ஏற்பட்ட சேதத்திலிருந்து மீள ஒவ்வோர் நாடும் முயன்றுகொண்டிருந்தது. அந்த நாடுகளில் பொருளாதார வளம் காண்பதற்கும், மக்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்த உதவுவதற்கும் கொழும்புத்திட்டம் வகுக்கப்பட்டது.

பத்தாண்டுகளுக்குப் பின்பு இன்று, அந்த நாடுகளில் செழிப்பைக் காண்கிருேம். அங்கங்கே அணைகளைப் பார்க்கிருேம். நீர்ப்பாசன வசதிகள் அதிகரித்திருப்பதால் பசுமை நிறைந்த வயல்களைக் காண்கிருேம். தான்ய தவச உற்பத்தி அதிகரித்திருக்கிறது. விசை நிலையங்களின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது. புதிய புதிய தொழிற்சாலைகளைக் காண்கிருேம். மக்கள் ஆரோக்கியமாக வாழ்கிருர்கள். சாவு விகிதம் குறைந்திருக்கிறது. பத்தாண்டு உழைப்பின் விளைவு இது. ஆனல் இது தொடக்க நிலைதான். இனி சுபிட்சம் பெருகும். மாபெரும் முயற்சியின் பலனைப்பெற நல்ல தொடக்கம் அவசியந்தான். கொழும்புத்திட்டம் தற்செயலாகத் தோன்றியதாகும். 1950-ம் ஆண்டில் உலக அரசியலை குறிப்பாக ஆசியா நாடுகளின் நிலைமையை ஆராயும் நோக்கத்துடன் காமன்வெல்த் வெளிவிவகாரத்துறை அமைச்சர்கள் கொழும்பு நகரத்தில் கூடினர்கள். அப்போது தெற்கு,தென் கிழக்கு ஆசியா நாடுகளின் பொருளாதார நிலைமையைச் சிந்திப்பது அவசியம் என்று ஆஸ்திரேலியா வெளிவிவகாரத்துறை அமைச்சர் திரு (பிற்காலத்தில் சர்) பெர்ஷி ஸ்பெண்டர் கூறினர். அந்த நாடுகளுக்கு தொழிற்துறை உதவியளிப்பதற்கான திட்டம் ஒன்றைத் தயாரிக்க காமன் வெல்த் நாடுகள் முன்வரவேண்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார். அதே சமயத்தில் இலங்கை நிதி அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா தெற்கு ஆசியா நாடுகள் முன்னேற்றமடைய பத்தாண்டு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்க வேண்டும் என்று ஓர் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். ஆனல், இந்த யோசனைகளை உடனே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதைப் பற்றிச் சிந்திக்க நான்கு மாதங்களுக்குப் பிறகு ஸிட்னியில் சந்திக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

ஸிட்னி கூட்டத்தில் திட்டம் தயாரிப்பதன் அவசியத்தை ஏற்றுக்கொண்டதுடன் 1851ம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு செயல்படக்கூடிய முறையில் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்குமாறு தெற்கு தென் கிழக்கு ஆசியாவிலுள்ள நாடுகளை கேட்டுக்கொள்ளப்பட்டது. நான்கு மாதங்களுக்குப் பிறகு பிரிட்டன், கனடா, இந்தியா, இலங்கை, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் சந்தித்து,தெற்கு தென் கிழக்கு ஆசியா மண்டலத்தின் பொருளாதாரச் சிக்கல்களையும் தேவைகளையும் அபிவிருத்தி யோசனைகளையும் கொண்டதோர் அறிக்கையை தயாரித்தார்கள். இந்த அறிக்கைதான் கொழும்பு திட்டத்தின் தோற்றுவாயாக அமைந்தது. இந்தியர், இலங்கை, சிங்கப்பூர், மலேயா சமஷ்டி, வடபோர்னியோ, புருனி, ஷராவக், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தத்தம் தேவையை ஆராய்ந்து அபிவிருத்தித் திட்டங்களைச் சமர்ப்பித்தன. ஆறு ஆண்டுகளுக்குள் நிறைவேற்றக்கூடிய திட்டங்களையே அவை சமர்ப்பித்தன என்ருலும் அவை அனைத்தையும் நிறைவேற்ற 187 கோடி பவுன்கள் தேவைப்படும் என்று மதிப்பிடு செய்யப்பட்டது. திட்டப் பிரதேச நாடுகள் சுயமுயற்சியுடனும் பரஸ்பரம உதவிக் கொண்டும் செயலாற்ற வேண்டும் என்ற கொள்கையைத் தொடக்கத்திலிருந்தே கடைப்பிடித்தன. அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படக்கூடிய நிதி பற்ருக்குறையையும் பயிற்சிபெற்ற ஊழியர்கள் பற்ருக்குறையையுமிட்டு திரப்ப காமன்வெல்த்தைச் சேர்ந்த பிரிட்டன், நியூஸிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் உதவி கோரப்பட்டது.

### நிபந்தனையற்ற நிதி உதவி

காமன்வெல்த் நாடுகளுக்கு உதவும் நோக்கத்துடன் கொழும்புத் திட்டம் தயாரிக்கப்பட்டது. என்ருலும் பிற்காலத்தில், தெற்கு தென்கிழக்கு ஆசியாவிலுள்ள நாடுகள் அனைத்துக்கும் பயனளிக்கும் முறையில் அது விரிவடைந்தது. இன்று இத்திட்டத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளாவன: இந்தியா, இலங்கை, மலேயா, சிங்கப்பூர், பாகிஸ்தான், புருனி, வட போர்னியோ, ஷராவக், பர்மா, கம்போடியா, இந்தோனேஷியா, லாவோஸ், நேபாளம், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வியட்நாம். திட்டத்தில் அங்கம் வகிக்கும் கொடை நாடுகள் பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஜப்பான், ஐக்கிய அமெரிக்க நாடுகள்.

இந்தத் திட்டத்திலுள்ள சிறந்த அம்சம், எவ்வித நிபந்தனையுமின்றி நிதி, தொழிற்துறை உதவிகளை அளிப்பதாகும். ஒவ்வொரு நாடும் தன்னுடைய தேவைக்கேற்றபடி திட்டத்தை தயாரித்துக்கொண்டு சிறப்புதவி பெறுவதற்கு வேறு நாடுடன் நேரடியாக ஒப்பந்தம் செய்துகொள்கிறது.

சென்ற பத்தாண்டுகளில் திட்டப் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையின் மொத்த மதிப்பு சுமார் 950 கோடி பவுன்கள். இதில் சுமார் 225 கோடி பவுன்களை திட்டத்தில் அங்கம் வகிக்கும் கொடை நாடுகள் வழங்கியிருக்கின்றன. அதாவது பொருளாதார முன்னேற்றத்திற்காகச் செலவிடப்பட்ட ஒவ்வொரு நான்கு பவுனிலும் ஒரு பவுன் திட்டத்திற்கு உதவும் நாடுகளிலிருந்து கொடையாகப் பெற்றதாகும்.

### உலகத் தலைவர்கள் பாராட்டு

#### பிரதமர் நேரு

"போதுமான அபிவிருத்தி அடையாத நாடுகளுக்கு உதவுவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் கொழும்புத் திட்டத்தின்பயனக ஏற்கனவே பல நன்மைகள் விளைந்திருக்கின்றன. இத்திட்டம் தொடங்கப்பட்டது முதலே இந்தியா, அதில் பங்கு பெறறு வருவதோடு, நன்மையும் பெற்றிருக்கிறது."

#### எலிஸபெத் மகாராணி

"கொழும்புத் திட்டத்தில் தென்படும் புதிய உணர்ச்சி தெற்கு, தென் கிழக்கு ஆசிய மக்கள் தேசிய அபிவிருத்திப் பாதையில் சென்றுகொண்டிருக்கும்போது ஏற்படும் துணிச்சலில் ஒரு பகுதியாகும்."

#### கானடா பிரதமர் டிபன்பேக்கர்

"கொழும்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருவது தனிப்பட்ட நாடுகள் கடமைப்பொறுப்புடன் ஒன்று சேர்ந்து செயலாற்றினல் அரிய சாதனைகளை நிகழ்த்தலாம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்."

#### சேர் ஒலிவர் குணதிலக்கா இலங்கை கவர்னர் ஜெனரல்

"கொழும்புத் திட்டப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு பூரணமானதும், மேலும் மேலும் நன்மைதரக்கூடியதுமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி சமுதாயத்தின் ஆணிவேரை வலுப்படுத்துவதற்குரிய முயற்சியே கொழும்புத் திட்டம். அதன் அடிப்படைத் தத்துவம் கூட்டுறவாகும். கொழும்புத்திட்டப் பிரதேசத்தில் உட்படாத முன்னேற்றமடைக்

(5ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

தன்மானத்தையும்,தன் குடும்பமானத்தையும் காபபாற்றிக் கொள்ள முயன்ற, மணமாகாத ஒரு பெண், நல்ல மருத்துவர்களின் உதவி கிடைக்க முடியாமல், தவருனவர்களிடம் சென்று தன் உயிரையே பலி கொடுக்க நேரிட்ட பரிதாப விவரங்களையும், மரண விசாரணை அதிகாரி கூறிய தீர்ப்பையும் படித்தேன். மனம் அமைதி இழந்து மிக வேதனைப்பட்டது.

புலன் விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு மரணவிசாரணை அதிகாரி பொலிஸுக்குஉத்தரவிட்டார். போலி வைத்தியர்களைக் கண்டித்தார். ஆனல் போலி வைத்தியர் மீது நடவடிக்கை எடுப்பதால் மட்டும் இப்பிரச்சினை தீர முடியாது.

இவ்வித அபலைகளுக்கு நல்ல யோசனை கூறி வேண்டியஉதவியளித்துப்பாதுகாக்க தக்க சமூக ஸ்தாபனங்கள் தேவையாகும். அவ்வித ஸ்தாபனமிருந்திருப்பின், ஒருபாவமுமறியாத பெண், இப்படி அநியாயமாக உயிரை இழக்காமல் தடுத்திருக்கலாம்.

பெண்களின் துயரம் பெண்களுக்கே தெரியும். கருணையும், சமூக சேவாஉள்ளமும், கல்வியும், செல்வமும் படைத்ததாய்மார்கள், சமூகத்திலே பலருண்டு. அவர்கள் முன்வந்து இவ்வித தர்ம ஸ்தாபனங்களை அமைத்து, திகைக்கும் அபலைகளுக்குத் தஞ்சமளித்துக் காக்கத் தக்க ஏற்பாடு செய்வது பெரிய புண்ணியம். இது பற்றி இனியும் தாமதம் செய்வது பல உயிர்களுக்கு வீண் ஆபத்தாக முடியலாம்.

* * *

பல வருடங்கள் கழித்து நேற்று ஓர் ஆங்கிலப் படம் பார்க்கப் போயிருந்தேன். ஒரு வாலிபர் ஒரு பெஞ்சியில் அமர்ந்து புகைத்துக் கொண்டிருந்தார். பக்கத்தில் பல பெண்கள் இருந்தனர். "தாங்கள் புகைக்கத்தான் வேண்டுமா?" என்று கேட்டேன். "பாதி சிகரெட் இருக்கிறது. அது முடிய வேண்டும்" என்று பதிலளித்தார் வாலிபர். "எனக்குப் பரவாயில்லை. பெண்கள் பலர் இருப்பதைப் பார்த்துத்தான் சொன்னேன்" என்றேன்.

"இக்காலத்தில் பெண்களும் தான் புகைக்கிருர்கள்" என்ருர் அவ்வாலிபர்.

"நல்ல வேளையாக எல்லாப் பெண்களும் அப்படியில்லை. ஒரு சிலர் புகைக்கலாம். அந்த மேலைநாட்டு நாகரிகம் இங்கு இன்னும் அதிகமாகப் பரவவில்லை"என்று கூறியதும்,அந்த வாலிபர், சற்று நேரத்திற்கெல்லாம்அந்த இடத்தைவிட்டுஎழுந்து சென்றுவிட்டார்.

* * *

மண்டபத்துள் சென்றதும், அங்கு ஒரு பெண் புகைத்துக் கொண்டிருந்தார். "படம் ஓடுகையில் புகைக்காதீர்கள். மற்றவர்களின் உணர்ச்சியை மதியுங்கள்" என்று ஸ்லைட் விளம்பரங்கள் காட்டினர். என்ருலும், யாரும் அதை லட்சியம் செய்யாமல், புகை மண்டலங்களை எழுப்பி, சில நிமிடங்களில் மண்டபமனைத்தும் புகை சூழ்ந்துவிட்டது! நம் உடை எல்லாம் புகை நாற்றம்.

அந்தப் புகைக் காற்றைத்தான் சுவாசிக்க வேண்டியிருந்தது.

இதைப்பற்றி ஓர் அன்பரிடம் சொன்னேன். முன்னரெல்லாம், 'புகைக்க வேண்டாம்' என்ற விளம்பர ஸ்லைட் காட்டியதும், பலரும் கூச்சலிட்டு கேலி செய்வார்களாம். இப்போது அக்கேலிக் கூச்சலில்லாதது ஒரு முன்னேற்றமென்ருர்!

(5-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் நாட்டின் மூன்று ஜில்லாக்களில் பெருவெள்ளம்

## பலர் மரணம்; குடிசைகள் சேதமடைந்தன

புதுடில்லி, ஜூலை 5

கன்யாகுமரி, திருநெல்வேலி, கோயமுத்தூர் ஆகிய தமிழ் நாட்டின் 3 ஜில்லாக்களில் வெள்ளப் பெருக்கின் காரணமாய் பலர் மாண்டதாகவும், நூற்றுக்கணக்கான விடுகளும், நிலங்களும் சேதமடைந்ததாயும் அறிவிக்கப்படுகிறது. பூரண விபரங்கள் இன்னும் வெளியாகவில்லை.

குடிசைகள், நெல் வயல்கள் மரவள்ளித் தோட்டங்கள் ஆகியன பாதிக்கப்பட்டன. வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டோருக்கு உதவித்தொகை வழங்க அரசாங்கம் ஏற்பாடுகள் செய்துள்ளது. காவேரி நதி வெள்ளப் பெருக்கெடுத்துள்ளதின் காரணமாய் ஈரோட்டில் நதியின் ஆழம் 18 அடியை எட்டிவிட்டது. அதன் உபநதியான பவானியிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனல் கோபி செட்டிபாளையத்தில் 3 கிராமங்கள் அழிந்தன. அமராவதியிலும் பெருவெள்ளம் ஏற்பட்டிருக்கிறது.

திருவனந்தபுரம் — கோட்டயம் பிரதான சாலையில் உடைப்பு ஏற்பட்டதால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருக்கிறது. எர்ணகுளமும், பாலக்காடு ஜில்லாவும் பாதிக்கப்பட்டுள்ளன. குடகில் பலத்த மழை பெய்தது. எனவே காவேரியில் இன்னும் பெருவெள்ளம் ஏற்படக்கூடுமென எச்சரிக்கப்பட்டிருக்கிறது. மேட்டூர் அணையில் நீர்மட்டம் 114 அடிக்கு உயர்ந்துள்ளது.

## கொழும்புத் திட்டத்

(4ம்-பக்கத் தொடர்ச்சி)

துள்ள நாடுகள், தெற்கு, தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு உதவியளித்துவருகின்றன. இப்பிரதேச நாடுகள் வளர்ச்சி அடையும்போது ஒன்றுக்கொன்று உதவியாக இருக்கின்றன. இந்த பரஸ்பர உதவித் திட்டத்தில் இலங்கை செய்ய முடிந்திருக்கிற உதவியை நினைத்து இலங்கை மக்களும் அரசாங்கமும் பெருமைப்படுகின்றனர்."

**துங்கு அப்துல் ரஹ்மான்**
**மலேயா பிரதம மந்திரி**

"சர்வதேசத் துறையில் ஜனநாயக கொழும்புத் திட்டம் மிகச் சிறந்தொரு எடுத்துக் காட்டாகும் இது பல அறிஞர்களின் சிந்தனைகளிலிருந்து முளைத்த அற்புதமான மரம். வெற்றிதரும் பல கருத்துக்கள் அதில் மலர்ந்திருக்கின்றன. முதன்முதலாக காமன்வெல்த் மண்ணில் தோன்றிய இம்மரம் சென்ற பத்து ஆண்டுகளில் சிறிதுசிறிதாக வளர்ந்து தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகள் நன்மைபெறும் விதத்தில் பிறநாடுகளிலும் அதன் கிளைகள் தோற்றுவித்திருக்கின்றன.

**மகம்மது அயூப்கான்**
**பாகிஸ்தான் தலைவர்**

"சர்வதேச நல்லெண்ணத்தையும், ஒற்றுமையையும் கூட்டுறவையும் வளர்ப்பதற்கும் மனிதனின் வாழ்க்கையை வளமாக்கும் முயற்சிகள் பயனைப் பகிர்ந்துகொள்வதற்கும் ஒன்றுபட்ட மனித முயற்சி எவ்வாறு செயல்பட முடியுமென்பதைக் கொழும்புத்திட்டம் விளக்குகிறது.

---

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

புகைக்க வேண்டாமென்ருல் இக்காலத்தில் யாரும் கேட்கமாட்டார்கள். புகைக்கும் அடிப்படைச்சுதந்திரம் தங்களுக்கு உண்டு என்று வாதிக்கலாம். ஆனல் பிறருக்கு உபத்திரவமில்லாமல் புகைக்கக்கூடாதா?

இந்தியாவிலே சினிமா சாலைகளில் புகைக்கக் கூடாதென்ற சட்டம் அமுலுக்கு வந்துவிட்டதாம். அதேபோல இங்கும் செய்ய வேண்டியதைப்பற்றி நமது சுகாதார அதிகாரிகள் கவனிப்பார்களா?

---

## ஜனத்தொகை மறுகணிப்பு

புதுடில்லி, ஜூலை 5

இந்தியாவில் ஜனத்தொகை கணிப்பு பிழை திருத்தம் முடிந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. சீக்கிரம் இது சம்பந்தமான விபரம் வெளியாகும் என்றும், கிராமத்தில் 1 சத விகிதமும், வீடுகளில் 10 சத விகிதமும் மறுகணிப்பு நடந்ததாயும் அறிவிக்கப்படுகிறது.

# செயற்கைச் சூரியன் மூலம் வெளிச்சம்

பெங்களூர், ஜூலை 5

ஒரு நகரத்தையோ அல்லது ஒரு பிரதேசத்தையோ வெளிச்சப்படுத்துவதற்கு செயற்கைச் சூரியனைச் சிருஷ்டிக்கக்கூடிய காலம் வரக்கூடும் என்று வல்லபாய் பட்டேல் நினைவுச் சங்கத்தின் எட்டாவது ஆண்டு நிறைவு விழாவிற்கு தலைமை வகித்துப் பேசிய பேராசிரியர் தாக்கர் கூறினர். இவர் விஞ்ஞான, தொழில் ஆராய்ச்சிக் கழகத்தில் டைரக்டராகக் கடமையாற்றுகிருர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஒவ்வொரு துறையிலும் மனித வர்க்கத்திற்கு பயன் தரக்கூடிய பல புதிய சாதனங்கள் விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்படும் என்றும் திரு. தாக்கர் கூறினர்.

---

## அப்பிள், திராட்சை இறக்குமதி

### தடையால் வர்த்தகர் கவலை

கொழும்பு, புதன்

தற்பொழுது மார்க்கட்டில் அப்பிள், திராட்சை போன்ற பழங்கள் கிடைப்பதில்லை.

இப்பழங்கள் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தடைவிதித்ததைத் தொடர்ந்தே இவ்வித நிலை ஏற்பட்டுள்ளது.

இதனல் நூற்றுக்கணக்கான நடைபாதை வியாபாரிகளும் வர்த்தகர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்த தடைவிதிப்பு எப்பொழுது தளர்த்தப்படும் என்று தாம் சொல்வதற்கில்லை என்று உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஆழ்வாப்பிள்ளை தெரிவித்தார்.

# தாலிக்கொடியை கேட்டவரை உலக்கையால் அடித்தாராம்

## கொலை வழக்கு விசாரணையில் சாட்சி வாக்குமூலம்

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி அஸைஸ் கோர்ட்டில் நீதிபதி டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா முன்னிலையில் பத்தைமேனி கொலை வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கிட்ணபிள்ளை கந்தசாமி என்பவரைச் சென்ற ஆண்டு 27-ம் திகதி உலக்கையால் அடித்துக் கொன்றதாக சண்முகம் பொன்னுத்துரை என்பவர் மீது தொடரப்பட்ட இவ் வழக்கை முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் கோர்ட்டில் ஆஜர் செய்தார்.

திரு. டி. தம்பிரத்தினத்தின் உதவியுடன் திரு. எ. சம்பந்தர், திரு. ஆர். கண்ணுத்துரை ஆகியோர் எதிரி தரப்பில் ஆஜரானர்கள்.

புத்தூரிலுள்ள கூட்டுறவுச் சங்கத்தில் குமாஸ்தாவாகக் கடமையாற்றும் 49 வயதுடைய திரு. வீ. சிதம்பரப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது: இறந்த கந்தசாமி எனது மைத்துணர். அவர் எனது மனைவியின் தம்பி. 1960-ம் வருடம் 27-ம் திகதி புதன்கிழமை இச்சம்பவம் நிகழ்ந்தது. இறந்தவர் என்னுடன்தான் வசித்து வந்தார். நான் எனது திருமணத்திலிருந்து இந்த வீட்டில் வசித்து வந்தேன். இறந்தவர் திருமணமானவர். அவர் தனியாகவே இங்கு தங்கியிருந்தார். அவரது மனைவி அவரின் பெற்ருேரோடு தங்கியிருந்தார். இவர்களுக்குள் விவாகரத்து நடைபெறவில்லை. இவர்கள் இருவரும் கடந்த ஐந்து வருடங்களாகப் பிரிந்து வாழ்ந்தார்கள். அவர்கள் மூன்று மாதங்கள் மட்டுமே ஒன்ருக வாழ்ந்தார்கள். இறந்தவர் ஒரு விவசாயி. நானும் எனது மனைவியும் எங்கள் வீட்டு முற்றத்திலே நடுவதற்குப்பயன்படுத்துவதற்காக வெங்காயத்தைக் கழுவிக் கொண்டிருந்தோம். நாங்கள் இரவு 7 மணிக்கு இந்த வேலையைத் தொடங்கினேம். இறந்தவர் இரவு 8 மணிக்கு அங்கு வந்தார். அவர் எனது மாமனுருடன் சுமார் ஒன்றரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். பின் சுருட்டு வங்குவதற்காக வெளியே சென்ருர். அந்த நேரத்தில் நாகலிங்கத்தின் வீட்டடியிலிருந்து சத்தம் கேட்டது. நானும் எனது மனைவியும் நாகலிங்கத்தின் வீட்டினுள் சென்ருேம். அங்கு இறந்தவரையும் வேலுப்பிள்ளை, ஆச்சிமுத்து, மகேஸ்வரன், மனேன்மணி, நாகலிங்கம் ஆகியோரையும் இன்னெருவரையும் நான் கண்டேன். இறந்தவர் நாகலிங்கத்திடம் தமது விவாகத்தை ரத்துச் செய்யுமாறும் அல்லது தாலிக்கொடியைத் திரும்பிக் கொடுக்குமாறு அல்லது அவரது மகளைத் தம்மோடு விடுமாறும் கேட்டார். நான் அவரிடம் குழப்பமொன்றையும் விளைவிக்காதிருக்கும்படியும் அமைதியாக இருந்தால் விஷயத்தை சமரசமாகத் தீர்த்துத்தருவதாகவும் கூறினேன். நாகலிங்கம் தாலிக்கொடியைக் கொடுக்க மறுத்தார். அப்பொழுது தாலிக்கொடி எங்கிருக்கின்றது என்று தமது மனைவியிடம் அவர் கேட்டார். அதே நேரத்தில் தமக்குக்கீழ் வேலை பார்க்கும் பொன்னுத்துரை என்பவரிடம் கந்தசாமியை அடிக்குமாறு கூறினர். அப்பொழுது பொன்னுத்துரை உலக்கையால் அடித்தார். இறந்தவருக்குப் பின்னல் நின்ற எதிரி இறந்தவரின் பின்தலையிலேயே அடித்தார். அடிவிழுந்ததும் அவர் கீழே விழுந்தார். நான் உலக்கையைப் பிடித்தேன். அப்பொழுது இன்னெருவர் என் கையில் வெட்டினர். நான் உடனே ஒரு காரைப் பிடித்துக்கொண்டு காயமடைந்தவரை காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன். அங்கிருந்து அவர் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். காலை சுமார் 5 மணியளவில் அவர் காலமானர். சாட்சிக்காரரை திரு. சம்பந்தர் குறுக்கு விசாரணை செய்தார். வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

# இ. போ. ச. வில் கைலஞ்சம் வாங்கும் ஊழியர்கள்

## தகவல் தரும்படி பொதுமக்களுக்கு அறிக்கை

கொழும்பு, புதன்

இ. போ. ச. தலைவர் திரு. ஆர். ரி. டி. சில்வா பொது மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இ. போ. ச. வில் வேலை தேடித் தருவதாகக் கூறி ஊழியர்கள் கைலஞ்சம் வாங்குவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. 100 ரூபாய் முதல் 1000 ரூபாய்வரை கைலஞ்சம்கொடுத்து பலர் பணத்தை இழந்திருப்பதாகவும் தெரிகிறது. இ. போ. ச. வில் எந்த காலி ஸ்தானமும் விளம்பரம் செய்யாமல் நிரப்பப்படமாட்டாது. இவ்விதம் லஞ்சம் வாங்குபவர்களை பொதுமக்கள் எனக்கோ அல்லது ஜெனரல் மனேஜருக்கோ தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

---

## குதிரைப் பந்தய தடையை புனராலோசனை செய்க

### மந்திரியிடம் வழக்கறிஞர் விண்ணப்பம்

கொழும்பு, புதன்

குதிரைப்பந்தயத்துக்கு தடை விதிப்பது சம்பந்தமாக திரு. ஜோர்ஜ்சிட்டி கியூ. சி, கைத்தொழில் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகாவிடம் பேட்டி கண்டு குதிரைப்பந்தயத்தைத் தடைசெய்யும்முடிவைப்புனராலோசனை செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். இத்தடையினல் பல தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்களென்றும் இத்தொழிலாளர் சார்பாகத் தாம் இவ்வாறு கேட்டுக்கொள்வதாயும் அவர் மந்திரிக்குக் கூறினர்.

மந்திரி இதற்குப் பதிலளிக்கையில் மூன்றுவருடங்களுக்கு முன்னரே இது விஷயம் அறிவிக்கப்பட்டதென்றும் திரு. சிட்டியின் இந்த ஆட்சேபனை காலம் கடந்ததென்றும் கூறி, பாதிக்கப்பட்ட தொழிலாளரின் பெயர் ஜாபிதாவை சமர்ப்பித்தால் அவர்களுக்கு வேறு வேலை தேடித் தர முயற்சி செய்வதாக அறிவித்தார்.

## பிரபல கொள்ளைக்காரன் சுடப்பட்டான்

புதுடில்லி, ஜூலை 5

மத்திய பிரதேஸில் சிக்கந்தரா என்ற பிரபல கொள்ளைக்காரனைப் பொலிசார் சுட்டுக்கொன்றதாய் அறிவிக்கப்படுகிறத. அவனது 4 சக கொள்ளைக்காரர்களும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஒரு கொள்ளைக்காரன் சிறைப்பிடிக்கப்பட்டான். அவர்களிடமிருந்து ஆயுதங்களும், வெடிமருந்தும் கைப்பற்றப்பட்டன. இக்கொள்ளைக்காரர்கள் வசமிருந்த 2 சிறுவர்கள் மீட்கப்பட்டனர்.

---

## புகையிரதத்திலிருந்து தப்பியோடிய கைதி

கொழும்பு, புதன்

கழுத்தின் இரு பக்கங்களிலும் இரு பறவை உருவங்களை பச்சை குத்தியுள்ள கைதியொருவர், நேற்று புகையிரதமொன்றிலிருந்து குதித்துப் தப்பியோடிவிட்டார்.

அனுராதபுர சிறையிலிருந்து மட்டக்களப்பு கோர்ட்டுக்குக் கொண்டுசெல்லும் வழியில் தான் இக்கைதி புகையிரதத்திலிருந்து தப்பியோடிவிட்டார் எனத் தெரிகிறது.

---

## கடலரிப்பினுல் பல ஏக்கர் நிலம் சேதம்

சிலாபம், புதன்

கடல் அரிப்புக்களைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை விரைவில் எடுக்காவிடில் சிலாபக் கரையோரத்திலுள்ள பல கிராமங்களை கடல் அரித்துவிடும் என நம்பப்படுகிறது.

வீடுகள், தென்னந்தோட்டங்கள், தெருக்கள், மணற்கரைகள் உட்பட பல ஏக்கர் நிலப்பகுதி கடல் அரிப்பினுல் சேதமடைந்துள்ளன.

சிலாபக்கரையோரைப்பகுதியில் எவ்வளவு பரப்பு நிலத்தைக் கடல் அரித்துவிட்டது என்று இன்னும் அளந்து மதிப்பிடப்படவில்லை. எனினும் அரசாங்க அதிகாரிகளும் பொதுமக்களும் கடந்த பதினைந்துவருடங்களுக்குள் நூறு ஏக்கர்களுக்கு அதிகமான நிலப்பரப்பை இப்பகுதிகளில் கடல்கொண்டது என அபிப்பிராயப்படுகின்றனர். சிலாபத்திற்கும் முத்துப்பந்தியாவிற்கும் இடைப்பட்ட 13 மைல்களுக்கிடையே 50 ஏக்கர்களுக்குமேல் கடல்அரித்துவிட்டது.

சிலவருடங்களுக்குமுன் அந்தியமுனை மீன்பிடித் தொழிலாளர்களுக்கு இப்பகுதி நடைபாதையாக உதவியது. உடப்பிற்கும் சிலாபத்திற்குமிடையே காணப்பட்ட நிலப்பகுதி இன்று கடலாகவிருக்கிறது. சென்ற பத்துவருடங்களில் இப்பகுதியிலமைந்திருந்த இருபதுக்குமேற்பட்ட வீடுகளைக் கடல்கொண்டுள்ளது. கடல் அரித்துச் செல்லும் மரங்களும் குத்திகளும் மீன்பிடிப்போரது வலைளுக்கும் தோணிகளுக்கும் சேதம் விளைவிப்பதால் இப்பகுதிகளில் மீன்பிடிகாரர்கள் மீன்பிடிக்காது விட்டுவிட்டார்கள்.

# யாழ்ப்பாணத்தில் ஒரு கலைக் கல்லூரி

## விரைவில் நிறுவுவதற்கு கலாசார மந்திரி திட்டம்

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணத்திலும், கண்டியிலும் இரண்டு கலைக் கல்லூரிகளை உள்நாட்டு கலாசார விவகார மந்திரி திரு. மைத்திரி பாலசேனநாயக்கா விரைவில் நிறுவுவார்.

ஹேவூட் கலைக் கல்லூரி மாதிரியில் யாழ்ப்பாணத்தில் ஒரு கலைக் கல்லூரியும், கண்டியில் ஒரு கலைக் கல்லூரியும் நிறுவுவதற்கு பணம் ஒதுக்குமாறு கலாசார மந்திரி மைத்திரிபால சேனநாயக்கா அடுத்த வாரம் அரசாங்கத்தைக் கோருவார்.

கலை ஆர்வம் உள்ள பிள்ளைகள் இக்கலலூரியில் தொடர்ந்து தங்கள் கலையைப் பயின்று வர அவர்களுக்கு உதவியளிக்கப்படும்.

கலையில் தொடர்ந்து பயிற்சி பெறுவதற்காகச் சென்ற வருடம் ஜூன் மாதத்திலிருந்து இதுவரை 16,670 ரூபாய் கலாசார விவகார இலாகா உதவி அளித்துள்ளது.

கலைக் கல்வியில் மிகத் திறமையாகச் சித்தியடையும் பிள்ளைகளை மேற்கொண்டும் பயிற்சி பெறுவதற்கு வெளிநாடுகளுக்கு அனுப்பும் ஒரு யோசனைபற்றியும் அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது.

---

### கொலை செய்ய எத்தனித்தவருக்கு 10 வருடச் சிறை

தெஹிவளை, புதன்

சிலாபம் மில்ஸ் ஏற்றுமதிக கம்பனியில் காவற்காரனுகக் கடமையாற்றும் எஸ். எம். விஜயரத்ன என்பவர் முத்தையா என்பவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ய எத்தனித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கில், குற்றவாளியாகக் கண்ட விஜயரத்னவுக்கு அசைஸ் கமிஷனர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா பத்து வருடக் கடுங்காவல் தண்டனை விதித்துள்ளார்.

### மருத்துவப் பெண்களின் கவலையீனம்

#### இரு சிசுக்கள் மரணம்

மக்கோன, புதன்

மருத்துவப் பெண்களின் கவலையீனத்தால், இரு சிசுக்கள் வலிப்புநோய் ஏற்பட்டு மரணமாயின.

களுத்துறை மருத்துவ விடுதியில் பிரசவமான முதற் சிசு, இறந்தது பற்றி மரண விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு. எம். எம் சலி, தகுதிவாய்ந்த மருத்துவப் பெண், கவலையீனமாகத் தொப்புளுக்கு மருந்து கட்டியதால் சிசு வலி கண்டு மரணமாயிற்றெனத் தீர்ப்பளித்தார்.

இரண்டாம் சிசு இறந்தது பற்றி நடத்திய மரண விசாரணையின்போது, சிசுவின் தந்தை தமது மனைவியின் பிரசவ காலத்திற்காகக் கிராமத்திலுள்ள மருத்துவப் பெண் ஒருவரை ஒழுங்கு செய்திருந்ததாகவும், சிசு பிறந்த சமயம், தொப்புள் கொடியை வெட்டுவதற்கு சாதாரணமான கத்தரிக்கோலையே அம்மருத்துவப் பெண் உபயோகித்ததாகவும் கூறினர்.

வலிப்புக் காரணமாக இரு குழந்தைகளும் மரணமாயின என்று திடீர் மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

---

### மடம் அமைக்க முயற்சி

ஊர்காவற்றுறை, புதன்

சரவணை-நாரந்தனை ஸ்ரீ கந்தசுவாமிகோவில் தெற்கு வீதியில் மடம்ஒன்றுஅமைப்பதற்கு மேற்படி கோவிலின் 9ந் திருவிழா உபயகாரர் முடிவு செய்துள்ளனர்.

### பென்ஸிலின் விளைவு ஆபத்து

#### தாதிமாருக்குஎச்சரிக்கை

கொழும்பு, புதன்

பென்சிலின் பாய்ச்சுவதினல் ஏற்படும் விளைவுகளைப் பற்றி வைத்திய இலாகா அதிகாரி, வைத்தியர்களின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளார். சில பென்சிலின் வகைகளை நாம் நோயாளருக்கு மிகக் கவனமாகப் பாய்ச்சவேண்டுமென்ருர்.

பென்சிலின் கொடுக்கப்பட்ட சில நிமிடங்களுக்குள் அது தொழிற்பட ஆரம்பிக்கின்றது ஆகையால் சுவாசம் விடுவதை அது பாதித்து உயிருக்கு ஆபத்தை உண்டாக்கிவிடக் கூடும் என்ருர். பென்சிலின் தொழிற்படும்போது நோயாளரைக் கவனமாகப் பார்ப்பதுடன் அவர்களுக்கு அளிக்க வேண்டிய சிகிச்சை முறைகளை தாதிமார் நன்கு அறிந்திருக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

---

### கூரை விழ்ந்து மாணவர் காயம்

கேகாலை, செவ்வாய்

நேற்று பிற்பகல் 12-45 மணியளவில் பெய்துகொண்டிருந்த கடும் மழை காரணமாக கேகாலை பாலிக வித்தியாலயத்தின் கட்டடம் ஒன்றின் மீது ரப்பர் மரமொன்று வீழ்ந்தது. இதனல் கட்டடத்தின் கூரை பலத்த சேதத்துக்குள்ளாகியது.

இவ் விபத்தால் காயமுற்ற பல குழந்தைகளும், ஆசிரியர்களும் கேகாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

---

### ரூர்கேலாவில் என்ஜினியரிங் கல்லூரி

புதுடில்லி, ஜூலை 5

ரூர்கேலாவில் என்ஜினியரிங் கல்லூரியொன்று விரைவில் நிறுவப்படவிருக்கிறது. ரூர்கேலா அதிகாரிகளும் ஒரிஸ்ஸா அரசாங்கத்தினரும் பேச்சு வார்த்தை நடத்தியபின் இந்த முடிவு செய்யப்பட்டது

ஐரோப்பிய பொதுச் சந்தையில்

# பிரிட்டன் சேர்வதானல் இலங்கைத் தேயிலைக்கு பாதுகாப்பு அவசியம்

கொழும்பு, புதன்

"ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்வதால் பிரிட்டிஷ் பொருளாதாரம் தளர்ச்சியுறுமாயின் காமன் வெல்த் நாடுகளை ஒன்றுபடுத்தி வைத்திருக்கும் பொருளாதாரப் பிணைப்பும் அதனல் பாதிக்கக்கூடும்" என இங்கு வந்திருக்கும் பிரிட்டிஷ் விமான மந்திரி திரு. பீட்டர் தோர்னி கிராப்ட் தெரிவித்தார்.

"பிரிட்டன் பொதுச் சந்தையில் சேர்ந்து கொள்வது மலாயாவை எந்த விதத்திலும் பாதிக்காது. மலாயாவின் முக்கியமான ஏற்றுமதிப் பொருள் ரப்பர். அது தீர்வை இல்லாமல் விற்கப்படுகிறது" என்று பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போது திரு. பீட்டர் தோர்னி கிராப்ட் தெரிவித்தார்.

ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்வதாக இருந்தால், இலங்கை ஏற்றுமதிப் பொருள்களுக்கு, முக்கியமாக இலங்கைத் தேயிலைக்கு போதிய பாதுகாப்புத்தர வேண்டும் என்று உறுதி கூறுமாறு, பிரிட்டனை இலங்கை அரசாங்கம் கேட்கவிருக்கிறது.

வர்த்தக, உணவு மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன, நிதி மந்திரி பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்கா, பிரதம மந்திரி ஆகியோர் செவ்வாய்க்கிழமை பிரிட்டிஷ் விமான மந்திரி திரு. பீட்டர் தோர்னி கிராப்டைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினர்கள்.

தீர்வை இல்லாமல் இலங்கைத் தேயிலை பிரிட்டனுக்கு ஏற்றுமதியாகிறது. ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்ந்தால், இலங்கைத் தேயிலைக்கு 15 தொடங்கி 18 சத விகிதம் தீர்வை போடவேண்டி நேரிடலாம். இதனல் இலங்கைத் தேயிலையின் விலை பிரிட்டனில் உயரக்கூடுமென இலங்கை அரசாங்கம் அஞ்சுகிறது.

தெங்கு உற்பத்திப் பொருள்கள் கூட இதனல் பாதிக்கப் படக்கூடும். ரப்பர் முக்கியமான மூலப் பொருளாகஇருப்பதால், ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்ந்தாலும்கூட, தீர்வையில்லாமல் பிரிட்டனில் ரப்பர் விலைப்படுமென அரசாங்கம் நம்புகிறது.

### அமெரிக்காவில் சினிமா பார்ப்பவர்களின் எண்ணிக்கை

வாஷிங்டன், ஜூலை 4

அமெரிக்காவில் டெலிவிஷன் வருவதற்கு முன்பு வாரத்திற்கு சராசரி 50,000,000 பேர் 1950-55 வருடங்களில் சினிமா பார்த்துவந்தார்கள். ஆனல் 1958ம் வருடத்திற்குச் சராசரி 400,000000 பேரே சினிமாப் பார்த்தார்கள். ஆனல் சென்ற வருடம் வாரத்திற்கு சினிமா பார்த்தவர்களின் தொகை சராசரி 44,000.000 பேர். இந்தவருடமும் சினிமாப் பார்ப்பவர்கள் இந்த அளவுக்கே இருப்பார்கள் என்று நம்பப்படுகிறது.

### இந்தியப் படவிழாவிற்கு ஜப்பானியப் படம்

புதுடில்லி, ஜூலை 4

இந்தியாவில் அக்டோபர் 27 முதல் நவம்பர் 17 வரை நடைபெறும் உலகப் படவிழாவில் கலந்துகொள்ள ஜப்பான் அரசாங்கம் 'தி த்ரீ ட்டஸ்ஸர்ஸ்' என்ற வர்ணப்படத்தை தேர்ந்தெடுத்துள்ளது. பதினருவது நூற்ருண்டில் கிக்கோ அரசர் காலத்தில் நடந்தவைகளைத் தழுவி பிரமாண்டமான செலவில் தயாரிக்கப்பட்ட இந்தப் படத்தை ஆஸ்கர் பரிசுபெற்ற பிரபல டைரக்டரான கிரோஷி இன்னுசி டைரக்ட். செய்திருக்கிருர். ஸிசில் டி மில்லரின் "டென் கமான்ட்மென்டஸ்" படத்தின் தரத்தை ஒத்ததாக இப்படம் பிரமிக்கத்தக்கவிதத்தில் இருக்கும் என்று கூறப்படுகிறது.

---

### மைசூர் - கேரள மதுவிலக்கு

பங்களூர், ஜூலை 5

மைசூர் - கேரள ராஜ்யங்களின் எல்லைப்பகுதிகளில் மதுவிலக்கை சரியான முறையில் அமுல் நடத்துவதற்கு இரு ராஜ்யங்களும் ஒத்துழைப்பதற்கு முடிவு செய்துள்ளன. சட்டவிரோத மதுபானத் தயாரிப்பு, விற்பனை ஆகியவைகளையும் தடுப்பதற்கு இரு அரசாங்கங்களும் கூட்டாக நடவடிக்கை எடுக்க ஒப்புக்கொண்டுள்ளன


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!!
எவை?

டொலர்

பவுண் அடையாளம் உள்ள

அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD
DOLLAR BRAND

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!
எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினியம் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்,
மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்.

J. D. 3



விரைவில் வெளிவரும்

ஈழநாடு
EELA NADU

வாரப் பதிப்பு

★

ஈழநாடு வாரப் பதிப்பில் வெளியிடுவதற்குச் சுவையான சிறு கதைகள், இலக்கியம், கலை, கல்வி, விஞ்ஞானம், பொருளாதாரம், கைத்தொழில்-விவசாயம், சமூகப் பிரச்சினைகள் சம்பந்தமான கட்டுரைகளை அன்பர்கள் அனுப்பி வைக்கலாம். பிரசுரமாகும் கதைகள், கட்டுரைகளுக்குச் சன்மானம் அளிக்கப்படும்.

தாளில் ஒரு பக்கத்தில் எழுதவேண்டும். பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளாதவற்றைப் பெற விரும்புவோர் அவற்றுடன் போதிய தபால் முத்திரை அனுப்பி வைக்கவேண்டும்.

கார்ட்டூன் படங்கள் வரைவதில் அனுபவமுள்ளவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

63, சிவன் கோவில் மேலை வீதி,
தபாற் பெட்டி எண்: 49
யாழ்ப்பாணம்.

ஆசிரியர்,
ஈழநாடு.

# வெளிநாடுகளிலுள்ள பென்ஷன்பெறும் இலங்கையர்

## பென்ஷன் பணம் இனி இல்லை

கொழும்பு, புதன்

வெளி நாடுகளில் தற்காலிகமாக வசிக்கும் பென்ஷன் பெறும் இலங்கையர்களுக்குப் பென்ஷன் அனுப்பும் வழக்கத்தை அரசாங்கம் நிறுத்தி விட்டது.

வெளி நாடுகளில் நிரந்தரமாக வசிக்கவேண்டும், இல்லையேல் இலங்கைக்குத் திரும்பி விடவேண்டும் என்று அவர்களுக்கு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற வெளிநாட்டவர்களுக்கு இச்சட்டம் இல்லை.

பென்ஷன் பெறும் பெருந்தொகையான இலங்கையர் வெளி நாடுகளில் தற்காலிகமாக வசித்து வருகின்றனர். இதுவரை இவர்கள் தங்களுக்குரிய பென்ஷன் பணத்தை அந்தந்த நாடுகளிலிருந்தபடியே பெற்றுவந்தனர். செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்ட விதிகளிருப்பினும் தங்களுக்குரிய பென்ஷன் தொகை முழுவதையும் அவர்கள் பெற்றுவந்தனர்.

வெளி நாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கு பென்ஷன் பணமாக பெருந் தொகையான பணம் அனுப்பப்பட்டுவந்ததாகத் திறைசேரி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தற்காலிகமாக வெளி நாடுகளில் வசிக்கும் இலங்கைப் பென்ஷனீயர்கள் அந்தந்த நாடுகளில் நிரந்தரமாக வசிப்பதென்று தீர்மானித்தால் அவர்கள் தொடர்ந்து தங்கள் பென்ஷன் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென்று தெரிகிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வியாழன் 6-7-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 கோட்டு வாத்தியம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப் பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 இரு வயலின்.

இரவு 7-00 கே. இராமச்சந்திரா-பேச்சு, 7-15 நேயர் விருப்பம், 7-45 'வாழ்க்கைத் திரை'-தொடர் நாடகம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-30 குரல் இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக் கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 ஆர். மீனட்சி-பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 ஆசிரியர்களுக்கு, 1-00 எஸ். ஆர். குப்புசுவாமி-பாட்டு, 2-10 ஆர். மீனட்சி-பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்,

இரவு 7-30 இம்மாதப்பாடல், 7-35 வி. ஆர். எம். செட்டியார்-பேச்சு, 7-45 செம்மை வைத்தியநாத பாகவதர்-ராகம், தானம், பல்லவி, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 திரைப் பட இசை, 9-15 சுபத்த சங்கீதம், 9-30 தாகூர் நூற்றாண்டு விழா (தமிழ்)

## சுட்டுக்கொன்றவருக்கு மரண தண்டனை

குருநாகல், புதன்

அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள யகாலிகமாவைச் சேர்ந்த முத்துவாகே மாட்டின் என்பவர், சமரபுலி விதனலகே எல்மிஸ் என்ற கிராம வாசியைச் சுட்டுக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கில், ஜூரிமார்களின் ஏகமனதான தீர்ப்பிற்கிணங்க, குருநாகல் அசைஸ் கமிஷனர் திரு. டி. ஈ. விஜயவர்த்தன, மாட்டினுக்கு மரண தண்டனை விதித்தார்.

## சாக்கிலெட்டுகள்

### மேற்கு ஜேர்மனியின் தேசிய உணவு

ஹாம்பர்க், (டாட்) ஜூலை 5

கொக்கோ பானம், சாக்கிலெட்டுகள் போன்றவைகளை உபயோகிப்பதில் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும், அடுத்தபடியாக மேற்கு ஜேர்மனி மூன்ருவது ஸ்தானத்தைவகிக்கிறது.

மேற்கு ஜேர்மனியர்களின் தேசிய உணவாக அவை இருந்து வருகின்றன. மேற்கு ஜேர்மனியில் ஆண்டுஒன்றுக்கு சாக்கிலெட் விற்பனை 25 கோடி டாலர்களாம். அவைகளைத் தயாரிக்க 214 தொழிற்சாலைகள் உள்ளன. இந்தத் தொழிலில், 30,000 பேர்களுக்கு மேல் ஈடுபட்டுள்ளனர். இதில் 85சதவிகிதத்தினர் பெண்கள்.

## தொகுதிப் பண்ணைகள்

### கடன் வழங்கும் திட்டம் அங்கீகாரம்

கொழும்பு, புதன்

தொகுதிகளில் விவசாயப் பண்ணை ஆரம்பித்து நடத்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன்வழங்கும் ஒரு திட்டத்தை அரசாங்கம் அங்கீசரித்துள்ளது.

இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு தொகுதிப் பண்ணைக்கும் தெரிவு செய்யப்பட்ட தொழிலாளர் கூட்டுறவு அபிவிருத்திக் கமிஷனரின் மேற்பார்வையின் கீழ் கூட்டுறவு விவசாயச் சங்கம் அமைத்துக் கொள்வர்.

இச் சங்கங்களுக்கு அந்தந்தப்பகுதி அரசாங்க அதிபர்கள் நிலம் ஒதுக்கிக்கொடுப்பார். இச் சங்கங்கள் விதை, உரம், விவசாயச் செய்கைக்கான சாதனங்கள் ஆகியவைகளை வாங்குவதற்கு விவசாயப் பகுதி கடன் வழங்கும்.

வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு ஆகியவைகளை கோழிப்பண்ணை, கால்நடைப் பண்ணை வளர்ப்பதற்கு இச் சங்கங்கள் நிறுவப்படுகின்றன.

## திருவிழா நடைபெறும்

ஊர்காவற்றுறை, புதன்

'சரவணை ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோவிலில் ஆண்டுக்கொரு அலங்காரத் திருவிழா வைக் கதிர்காம தீர்த்த தினத்தன்று நடத்தவேண்டும்.' என்ற தீர்மானம் சென்ற ஞாயிற்றுக்கிழமை கோவில் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படிகோவிலின் பரிபாலன சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. சபைத்தலைவர் திரு. கு. வைரமுத்து கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். திரு. சி செல்வத்துரை, திரு. சி. சுப்பிரமணியம், திரு.வி. மயில்வாகனம் ஆகியோர் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.


ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது




இலங்கை தேநீரை அறியும்!

இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்"டையும் அறியும்—இந்தச் சிறந்த பால் தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதிகரிக்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் எனத்தெரிவு செய்யப்பட்டு நெஸில்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. இது மிகவும் சிறந்த ரகமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழுதும் "மில்க்மெயிட்" பாலையே கேட்டுவாங்குங்கள்.

தேநீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னன விதிகள்:

* பக்கெட்டில் அடைக்கப்பட்ட திறமான தேயிலை
* உஷ்ண தேநீர்ப் பானை
* ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால். பாலைக்கு ஒன்று
* சுத்தமாக கொதித்த வெந்நீர்
* 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

ஆனல்! "மில்க்மெயிட்" பாலை எப்போதும் மறவாதீர்கள்.




"மில்க்மெயிட் பால்" — சிறந்த பால்

# தாயின் தாலிக் கொடியை மகன் திருடினர்!

## தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது

மாவிட்டபுரம், புதன்

அளவெட்டியைச் சேர்ந்த கந்தையா நாகம்மா என்பவரின் ரூ. 1500 பெறுமதியான தாலிக் கொடியைத் திருடியதாக அவரின் மகனான கந்தையா சொக்கநாதன் என்பவர்மேல் சுன்னாகம் பொலிஸாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. டபிள்யூ. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி தீர்ப்புக் கூறுவதை 12-7-61 க்கு ஒத்திவைத்து, எதிரியை அத்திகதிவரை விளக்கமறியலில் இருக்கும்படி கட்டளையிட்டார்.

இவ்வழக்கில் கந்தையா, நாகம்மா சாட்சியமளிக்கையில், சம்பவம் நடைபெற்ற தினத்திற்கு முதல் நாள் இரவு 10 மணிக்கு தான் படுக்கைக்குச் சென்றதாகவும், அப்பொழுது தாலிக்கொடி அலமாரியில் உள்ள ஒரு லாச்சியில் வைத்ததாகவும் கூறினர். மறுநாள் நண்பகல்போல் எதிரி தாலிக் கொடி கிடந்த அலமாரிக்குப் பக்கத்தில் படுத்திருந்ததைத் தான் கண்டதாகவும், ஒரு மணிபோல் தான் தாலிக்கொடி எடுக்கச் சென்றபோது, தாலிக்கொடியைக் காணவில்லையென்றும், அச்சமயத்தில் எதிரியாகிய தனது மகனும் வீட்டில் இருக்கவில்லை என்றும், இது பற்றிச் சுன்னாகம் பொலிஸில் புகார் செய்ததாகவும் கூறினர்.

மறுநாள் இன்ஸ்பெக்டர் திரு. செபமாலை எதிரியுடனும் மற்றமகனுடனும் தன்னுடைய வீட்டிற்கு வந்ததாகவும், எதிரியின் உதவியுடன் திரு. செபமாலை ஒரு பெட்டியினுள் இருந்து தாலிக்கொடியை எடுத்ததாகவும், மேலும் நாகம்மா தனது சாட்சியத்தில் கூறினர்

சுன்னாகம் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு. செபமாலை சாட்சியமளிக்கையில், கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் கான்ஸ்டபிளாக கடமையாற்றும் எதிரியின் தமையனான திரு. கே. கமலநாதனுக்கு தான் இச்சம்பவம் பற்றித் தகவல் கொடுத்ததாகவும் அவர் எதிரியைக் கொழும்பில் கைது செய்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தன்னிடம் ஒப்படைத்ததாகவும் கூறினர்.

தாலிக்கொடி கண்டெடுக்கப்பட்டபோதிலும் அதில் இருந்த ஓர் அரைத் தங்கப்பவுணைக் காணவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெகுவிரைவில்
சினிமாஸ் திரைகளில்
ஜெமினி கணேசன்-பத்மினி
தங்கவேலு
மற்றும் பலர் நடித்த
மதுரம் பிக்சர்ஸாரின்
மீண்ட சொர்க்கம்

கிங்ஸ்லி பிளாஸா வெம்பிளி
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கண்டி)



பிரேம் நஸீர், ராகினி, வீரப்பா, எம். என். ராஜம், வி. ஆர். ராஜகோபால் நடித்த
இருமனம் கலந்தால் திருமணம்
பின்னணி: சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எஸ். ஸி. கிருஷ்ணன், ராகவன், ஜமுனா ராணி.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 5-15 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-15 மணிக்கும்

சிவாஜி கணேசன் — பத்மினி
நடித்த
அமரதீபம்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30 மணிக்கும் மாலை 5-30மணிக்கும்
எவலின் நாப், ரேபேட் அலென்
நடித்த
பெரில்ஸ் ஒவ் போலின்
(ஆங்கில சீரியல் படம்)

பிற்பகல் 2, 3-45 சனி, ஞாயிறு காலை 10-30
பெட்லன் காஸ்ரா, கோர்க் டக்லஸ்
நடித்த
த டெவில்ஸ் டிசைப்பிள்
(சண்டைகள் நிறைந்த படம்)

## நடேஸ்வராக் கல்லூரி

### பேச்சுப் போட்டி

மாவிட்டபுரம், புதன்

"பாடசாலையில் இல்லங்களுக்கிடையே நடத்தப்படும் இப்படியான பேச்சுப்போட்டி மாணவரிடையே அமைந்திருக்கும் இயற்கை வல்லமையையும் ஆற்றலையும் வெளிப்படுத்துவதற்கும் அறிவதற்கும் அரிய சந்தர்ப்பத்தை அளிக்கின்றது." இவ்வாறு நடேஸ்வரக் கல்லூரி இல்லங்களிடையே நடைபெற்ற பேச்சுப்போட்டியில் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் கல்லூரி அதிபர் திரு. ஏ. மார்க்கண்டு கூறினர்.

வெற்றிபெற்றவர்களின் விபரம் பின் வருமாறு.

**கீழ்ப்பிரிவு:**

பெண்கள்:- ஜி. யோகாம்பிகை, பாரதி இல்லம். ரி. காந்திமதி, வள்ளுவர் இல்லம். பி. காந்தாமணி, கம்பர் இல்லம்.

ஆண்கள்:- பி. கணேசமூர்த்தி, கம்பன் இல்லம். ஏ. ஆர். இராசமாணிக்கம்; பாரதி இல்லல். பி. விக்கினேஸ்வரன், வள்ளுவர் இல்லம்.

**மத்தியபிரிவு**

பெண்கள்:- கே. கமலரஞ்சிதம்,பாரதி இல்லம். எஸ். விமலநாயகி, பாரதி இல்லம். ரி. மகேஸ்வரி, பாரதி இல்லம்.

ஆண்கள்:- எஸ். தர்மரத்தினம், இளங்கோ இல்லம். ஆர். இராசேந்திரன் இளங்கோ இல்லம். இ. மகேந்திரராசா, வள்ளுவர் இல்லம்.

**மேற்பிரிவு**

வி. சண்முகானந்தம், கம்பர் இல்லம். எஸ். செல்வதி, கம்பர் இல்லம். எஸ்.பாவநாசசிவம், பாதி இல்லம்.

# சிங்களம் தெரியாத வழக்கறிஞருக்கு ரூ. 50 அபராதம்

கொழும்பு, புதன்

கொழும்பு காஸில் வீதியிலுள்ள பிரபல வழக்கறிஞர் திரு. வி. எஸ். பார் குமாரகுலசிங்க தமது 1960-61 க்கான சொத்து வரியைச் செலுத்தத் தவறியதற்காக கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு. ஏ. டி. எஸ். விஜயசேகரா ரூ. 50 அபராதம் விதித்தார்.

வருமானவரி இலாகாவால் தொடரப்பட்ட இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது திரு. பார் குமாரகுலசிங்கவின் தரப்பில் ஆஜராகியிருந்த வழக்கறிஞர் தெரிவித்ததாவது:-

'திரு. பார் குமாரகுலசிங்க தமிழராகையால் அவருக்கு வருமானவரி இலாகாவிலிருந்து சிங்களத்தில் விலாசமிடப்பட்டு வந்த கடிதங்களை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதுதான் அவர் மேற்படி இலாகாவுக்குச் சேர்மதியான பணத்தை அனுப்பாததற்குரிய ஒரே காரணம்.'

தமது கட்சிக்காரர் சார்பில் அவர் குற்றவாளியென அவருக்கு ஆஜரான வழக்கறிஞர் கேட்டுக்கொண்டார். மாஜிஸ்திரேட் திரு. குமாரகுலசிங்கத்துக்கு 50 ரூபா அபராதம் விதித்தார்.

## சித்தங்கேணி மகா கணபதியார் கோவில் சங்காபிஷேக விழா

சித்தங்கேணி, புதன்

சித்தங்கேணி மகா கணபதி கோவில் சங்காபிஷேக விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அன்று காலை 8 மணி தொடக்கம் 1008 சங்கு வைத்து சங்காபிஷேகமும், மாலை விசேட மேளக் கச்சேரியும், பின்னர் வண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரி ஆசிரியர் திரு. ஆறுமுகத்தின் சங்கீத கதாப்பிரசங்கமும் நடைபெற்றன.

இரவு 8 மணியளவில், சுவாமி பூத்தண்டிகையில் வீதி வலம் வந்தார்.

## கிருஷ்ணன் தோல்வி

லண்டன், ஜூலை 4

இந்திய டெர்னிஸ் வீரர் ஆர். கிருஷ்ணன் விம்பில்டென் டென்னிஸ்போட்டிசெமினபைனலில் ஆஸ்திரேலிய வீரர் ரொட்லீவரினல் இன்று தோற்கடிக்கப்பட்டார். புள்ளி விபரங்கள். 6-2, 8-6, 6-2.

## சொந்த அச்சுக்கூடம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது சம்பந்தமாக அரசாங்க அச்சக அதிகாரியிடமிருந்து ஆலோசனை கேட்கப்பட்டதாகவும் அவர் மாநகரசபையில் அச்சியந்திரசாலை ஒன்றை நிறுவ சிபார்சு செய்திருப்பதாகவும் இது சம்பந்தமான ஆலோசனைகள் அடங்கிய கடிதமொன்றை இங்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிய வருகிறது. இது இப்பொழுது கமிட்டி நிலையில் ஆராயப்பட்டு வருவதாகவும் சபையின் அடுத்த கூட்டத்தில் இது ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப் படவிருப்பதாகவும் தெரிகிறது.

இந்த அச்சியந்திரசாலையை நிறுவுவதன் மூலம் செலவைக் கட்டுப்படுத்துவதோடு, சபையினருக்கு நடைமுறைப் பிரச்சினைகளுக்கு உதவியாக இருக்குமென்றும் கருதப்படுகிறது. இதே சமயம் இமுயற்சி சபைக்குப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தலாமெனச் சிலர் சுட்டிக் காட்டி இதனை மேற் கொள்ளுவது நல்லதல்லவெனவும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

அரசாங்க அச்சக அதிகாரியின் அறிக்கை சபைக் கூட்டத்தில் ஆலோசனைக்கு வரும் போது அச்சியந்திரசாலை நிறுவுவதா, இல்லையா என்பது தீர்மானிக்கப்பெறும்.

## மார்க்கெட் விலை வாசிகள்

### தங்கம், வெள்ளி

யாழ்ப்பாணம், திங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| புடத்தங்கம் | 104 - 50 |
| நகைப்பவுன் புதிது | 98 - 00 |
| " பழையது | 96 - 00 |
| தங்கப்பவுன் | 101 - 00 |
| அரைத்தங்கப்பவுன் | 55 - 00 |
| மூஸ்வெள்ளி தோலா | 2 - 25 |

### காய் கறி

மார்க்கெடிங் இலாகா (யாழ்ப்பாணக்கிளை) இவ்வாரம், சில்லறையாக காய்கறிகளை விற்கும் விலை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | | ரூ—ச |
|---|---|---|
| கோவா | ரூத்தல் | 0 - 55 |
| புடலங்காய் | " | 0 - 18 |
| கத்தரிக்காய் | " | 0 - 38 |
| போஞ்சி(பட்டர்) | " | 0 - 65 |
| போஞ்சி(மற்றரகம்) | " | 0 - 65 |
| காரட் | " | 0 - 75 |
| லீக்ஸ் | " | 0 - 55 |
| சாம்பல் வாழைக்காய் | " | 0 - 15 |
| பிஞ்சுமிளகாய் | " | 0 - 60 |
| வெண்டைக்காய் | " | 0 - 45 |
| பொன்னங்காணி | " | 0 - 22 |
| வல்லாரை | " | 0 - 90 |
| பூசனிக்காய் | " | 0 - 14 |
| சுத்தமானநெய்போத்தல் | | 6 - 50 |
| காட்டு பச்சை அரிசி (தலைவெட்டியது)கொத்து | | 0- 65 |
| புழுங்கல் அரிசி (தலைவெட்டியது)கொத்து | | 0- 75 |
| புளி | " | 0 - 85 |
| தேங்காய் எண்ணெய் | போத்தல் | 0 - 80 |
| எள் எண்ணெய் | " | 2 - 50 |
| வெள்ளைப்பூடு, (மார்க்கெட்நிலை) ரூ. | | 1 - 47 |

### கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு (இந்தியா) | 0 - 35 |
| உருளைக்கிழங்கு (இத்தாலி) | 0 - 27 |
| மிளகாய் (1-ம் நம்பர்) | 1 - 23 |
| ஸயாம் மிளகாய் | 1 - 04 |
| சின்னச் சீரகம் | 0 - 97 |
| மஞ்சள் | 0 -58 |
| ஜப்பான் மல்லி | 0 - 95 |
| உளுந்து | 0 - 32 |
| பாசிப்பயறு | 0 - 36 |
| துவரம்பருப்பு | 0 - 30 |
| கடலைப்பருப்பு | 0 - 48 |
| சிந்தாமணிக் கடலை | 0 - 43 |
| பம்பாய் வெங்காயம் | 0 - 20 |
| வெள்ளைப்பூடு (பம்பாய்) ரூத்தல் | 0 - 35 |

மிளகு 1 ரூத்தல் ரூ. 3 - 22. (கட்டுப்பாட்டுவிலை இல்லை)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலைவீதி, 63-ம். இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 6-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.